தென் மாகாண சபை - 2022

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தென் மாகாண சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மாகாண சபை அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றம் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 2023 மே 26 ஆந் திகதி வெளியிடப்பட்டதுடன், தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 08 ஆந் திகதி வெளியிடப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கும், அறிக்கையின் பிரதியொன்று 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையில் சமர்ப்பிப்பதற்காக ஆளுநருக்கும் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக் கூற்றுக்கள் தென் மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) தென் மாகாண சபை நிதியம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் மாகாண சபையில் 03 நிறுவனங்களுக்கு நன்கொடையாகக் கிடைத்திருந்த ரூபா. 22,694,340 பெறுமதியான சொத்துக்கள் மற்றும் 03 நிறுவனங்களினால் செலவு செய்யப்பட்டிருந்த ரூபா. 10,323,113 பெறுமதியான மூலதன செலவு என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்காததால் மாகாண சபை நிதிக் கணக்கில் சொத்துக்கள் கருவிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா. 33,017,453 இனால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நிறுவனத்திற்கு சொந்தமான அனைத்து நிலையான சொத்துக்களின் பெறுமதிகளும் சொத்துக்கள் கருவிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும் எனவும் குறித்த குறைபாடுகளைத் திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் குறித்த நிறுவனங்களுக்குத் தெரிவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சொத்துக்கள் கருவிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி சரியாக அடையாளம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | தென் மாகாண வருமான திணைக்களம் அடமான நிறுவனங்களிடம் இருந்து அறவிட்டிருந்த மீளச் செலுத்தப்பட வேண்டிய ரூபா. 27,550,000 பெறுமதியான பிணை வைப்புத் தொகை மற்றும் அதற்கான வட்டி வருமானம் என்பன நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. அதற்காகக் கிடைத்த வட்டி வருமானம், நடைமுறை அல்லாத பொறுப்புக்களாக குறிப்பிடப்பட்டிருந்ததால் முன்னைய வருடத்திற்காக கிடைத்த வட்டியான ரூபா. 16,274,301 திரட்டிய நிதிக்கும், மீளாய்வு ஆண்டில் கிடைத்த வட்டி ரூபா.3,068,229 அந்த வருடத்தின் வருமானத்திற்கும் கொண்டு செல்லப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வினால் பரிந்துரைக்கப்படுவதாவது வட்டியானது வருமானமாக கொள்ளப்பட வேண்டுமாயின் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான தென் மாகாண நிதிக் கணக்கினைத் தயாரிக்கும் போது அதனை வருமானத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதாகும். | சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் வருமானம் மற்றும் செலவு என்பன பிழையின்றி அடையாளம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (iii) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா.49,091,426,823 ஆன போதிலும், முதலீட்டுக் கையிருப்பு கணக்கின் மீதி ரூபா.54,842,751,185 ஆக இருந்தமையால் ரூபா.5,751,324,362 வேறுபாடு காணப்பட்டது. | கணக்குகளின் மீதிகளுக்கிடையே வேறுபாடு ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒரு காரணியாகும். அதற்குக் காரணமாக முதலாவது நிலையான சொத்துக்களை அடையாளம் கண்டு கணக்கீடு செய்யும் போது நிலையான சொத்துக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு இணைந்த நிதிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. அதனால் மூலதன கையிருப்பு ஏற்படவில்லை. அதே போன்று சொத்துக்களை அகற்றும் போது அகற்றுவதில் இருந்து கிடைக்கும் தொகைக்கு சமனான தொகையினை மூலதன கையிருப்பு கணக்கில் இருந்து அகற்றல் கணக்கிற்கு மாற்றப்படுகின்றது என்பதனால் கணக்குகளுக்கு இடையில் வேறுபாடு காணப்படுகின்றது என்பதாகும். | சரியான முறையில் இரட்டை பதிவுகளை இடுதல் வேண்டும். சொத்துக்கள் கருவிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதிகள் என்பவற்றை மூலதன கையிருப்பு கணக்கினை தயாரிப்பதற்கு உட்படுத்துதல் வேண்டும். |
| (iv) | மாகாண அரசு உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு மீதியை குறிப்பிடும்போது கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதிகளை வெவ்வேறாக குறிப்பிட வேண்டிய போதிலும், மீளாய்வு ஆண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் காணப்பட்ட ரூபா. 29,462,767 கடன் தருநர் மீதியானது கடன்படுநர் மீதியில் இருந்து குறைக்கப்பட்டு காட்டப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றினை தயாரிக்கும் போது கடன்படுநர் மற்றும் கடன்தருநர் மீதிகளை வெவ்வேறாகக் காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கில் கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதிகளை வெவ்வேறாகக் காட்டுவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | | | எடுக்கப்படுதல் வேண்டும். |
| (v) | ஆரம்ப சுகாதார மேம்பாட்டு செயல் திட்ட (PSSP) நிதியின் கீழ் Civil works ஆக 2019 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வு ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் செலவிடப்பட்டிருந்த ரூபா.329,355,947 மூலதன செலவு பெறுமதியானது குறித்த ஆண்டுகளில் மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததால் தென் மாகாண சபை நிதிக் கணக்கில் சொத்துக்கள் கருவிகள் மற்றும் உபகரணங்கள் அதே அளவில் குறைவாகக் காட்டப்பட்டிருந்தன. | மூலதனம் ஆக்கப்பட வேண்டிய அனைத்து மூலகன செலவுகளும் மூலதனம் ஆக்கப்படல் வேண்டும் எனவும் குறித்த தவறை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | மூலதனம் ஆக்கப்பட வேண்டிய அனைத்து செலவுகளும் மூலதனம் ஆக்கப்படுதல் வேண்டும். |
| (vi) | மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதியில் மாகாண தீர்மானிக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்களின் கீழ் செலுத்தப்பட வேண்டிய ரூபா. 22,176,843 தொகை மற்றும் வாகன திருத்துதலுக்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா.9,737,787 தொகை என்பன தென் மாகாண சுகாதார சேவை திணைக்களத்தின் பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் என கணக்கீடு செய்யப்படாத காரணத்தால் தென் மாகாண சபை நிதிக் கணக்கின் திரட்டிய செலவுகள் ரூபா.31,914,630 இனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | நிதிகி கூற்று தயாரிக்கும் போது குறித்த காலப் பகுதிக்கு உரிய அனைத்து பொறுப்புகளும் மற்றும் கடமைகளின் பெறுமதிகளும் சரியாக அடையாளம் காணப்பட்டு குறித்த தவறினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தெளிவாக அடையாளம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (vii) | மீளாய்வாண்டில் தென் மாகாண வருமான திணைக்களத்தின் (தலைப்பு 324) கீழ் கட்டு நிதி தீர்த்தல் ரூபா.518,501 உள்ளிட்ட தென் மாகாண சபை நிதிக் கணக்கின் காசுப் பாய்ச்சல் கூற்றில் கட்டுநிதி தீர்த்தல் ரூபா.401,793,057 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும், மாகாண வருமான திணைக்களத்தின் மாதாந்த கணக்கு சாராம்சத்திற்கு அமைய கட்டு நிதி தீர்த்தல் ரூபா.3,691,551,946 ஆக இருந்ததால் மீளாய்வு ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான காசு பாய்ச்சல் கூற்றில் நிதி செயற்பாடுகளில் ஏற்பட்ட காசு பாய்ச்சலின் கீழ் கட்டுநிதி தீர்த்தல் ரூபா.3,691,033,445 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணக்கப்படவில்லை. தென் மாகாண வருமானத் திணைக் களத்தின் மாதாந்த கணக்கு கட்டு நிதி தீர்த்தல் ரூபா.518,501 ஆகும். தென் மாகாண நிதிக் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டு நிதி தீர்த்தல் பெறுமதி சரியானது என்பது. | கட்டுநிதி தீர்ப்பனவு மற்றும் மாகாண வருமானத் திணைக்களத்தினால் சேகரிக்கப்படும் அனுப்பல் தீர்ப்பனவுகள் நிதிக்கூற்றுக்களில் தெளிவாக காண்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.2.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

### (அ) தென் மாகாண சபை நிதியம்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | தென் மாகாண பிரதான செயலாளர் அலுவலகம் மற்றும் பிரதி பிரதான செயலாளர் (திட்டமிடல்) அலுவலகத்தில் மீளாய்வாண்டிற்கான நிதி கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் மற்றும் பயன்படுத்தப்பட்டுள்ள ஏடுகளில் காட்டப்பட்டுள்ள மீதிகள் என்பவற்றுக்கிடையே ரூபா.559,054,428 வேறுபாடு காணப்படுகின்றது. | நிலையான சொத்து பதிவேட்டுக்கமைய மீதி மற்றும் நிதிக்கூற்றிற்கு அமைய மீதி என்பவற்றுக்கு இடையே உள்ள வித்தியாசத்தினை அடையாளம் கண்டு திருத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என குறித்த நிறுவனத்திற்குத் தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | கணக்கு மீதிகள் ஒப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | தென் மாகாண நிதிக் கணக்கு நிதி நிலைமைக் கூற்றில் உள்ள நடைமுறைப் பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டுள்ள மாகாண நிர்வாக நிறுவனங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய முத்திரைக் கட்டணங்கள் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் என்பன முறையே ரூபா.109,047,728 மற்றும் ரூபா.9,382 ஆக உள்ளதுடன் குறித்த மாகாண நிர்வாக நிறுவனங்களினால் மீளாய்வாண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளுக்கு அமைய அந்தப் பெறுமதிகள் முறையே ரூபா.1,942,706,787 மற்றும் ரூபா.47,114,400 ஆகும். அதற்கு அமைய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களின் மொத்தத் தொகையில் ரூபா.1,880,764,077 வேறுபாடு காணப்பட்டது. | செலுத்தப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் தொடர்பான ஏடுகளுக்கு அமைய 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் மேலும் செலுத்தப்பட வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா. 109,047,726 மற்றும் நீதிமன்ற தண்டப்பணம் ரூபா.9,382 ஆகும். குறித்த பெறுமதிகள் தொடர்பில் மாகாண நிர்வாக நிறுவனங்களை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனால் மாகாண திறைசேரியினால் தெரிவிக்கப்பட்டுள்ள மீதியினை கணக்குகளில் உள்ளடக்குமாறும் மாகாண நிர்வாக நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பது. | கணக்கு மீதிகள் ஒப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டு நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.2.3 பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திசம்பர் 31 ஆம் திகதியில் மாகாண அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு மீதி ரூபா. 1,339,747,082 ஆக குறிப்பிடப்பட்டு இருந்ததுடன் அந்த மீதிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற, ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் மரணம் அடைந்த, வேலையில் இருந்து நிறுத்தப்பட்ட மற்றும் சேவையை கைவிட்டுச் சென்ற உத்தியோகத்தர்கள் 3,815 பேரினது இன்னமும் அறவிடப்பட வேண்டிய மொத்த தொகை ரூபா. 69,437,646 ஆன கடன் மீதி உள்ளடக்கப்பட்டிருந்தது. | வலஸ்முல்ல வலயக் கல்வி அலுவலகத்தில் கடன் மீதி தொடர்பான தகவல்கள் தவிர, ஏனைய நிறுவனங்களில் இடமாற்றம் பெற்றுச் சென்ற, மரணம் அடைந்த மற்றும் ஓய்வு பெற்ற, வேலையில் இருந்து நிறுத்தப்பட்ட மற்றும் சேவையை கைவிட்டுச் சென்ற 4,019 உத்தியோகத்தர்களிடையே 316 உத்தியோகத்தர்களின் ரூபா.17,423,083 கடன் தொகை தீர்க்கப்பட்டிருந்ததுடன் மிகுதி கடன் மீதியைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பது. | உரிய கடன் மீதிகளை உடனடியாகத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு மாகாண திறைசேரி உள்ளடங்களான அந்தந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும் என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் செயல் திறன் தொடர்பான அடிப்படைக் கருத்தினை வெளிப்படுத்தும் நோக்கில் இல்லாத போதும், பொருத்தமான கணக்காய்வு ஒழுங்கு விதிகளைத் தயாரிக்கும் நோக்கில் மாகாண சபையில் உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துணர்வு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

- பயன்படுத்தப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட இது தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் உண்மைத் தன்மை என்பன மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்**

**1.5.1 தலைப்பு 300 - ஆளுநர் செயலகம்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்.**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2018 ஒக்டோபர் 12 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் PS/CSA/11-18 கொண்டதுமான "அரச செலவு முகாமைத்துவம்" சுற்றறிக்கையின் 4.1 பிரிவு | ஆளுநருக்கு பெற்றுக் கொள்ளக்கூடிய அதிகபட்ச மாதாந்த எரிபொருள் தொகை / கொடுப்பனவு தொடர்பாகக் கருத்தில் கொள்ளாது சுற்றறிக்கைக்கு இணங்காத வகையில் ஆளுநருக்காக ஒதுக்கப்பட்ட வாகனத்தின் மேலதிக எரிபொருளாக 4317.50 லீட்டருக்காக ரூபா.741,582 தொகை ஆளுநர் செயலகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது.<br>மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 03 ஆம் இலக்க பந்திக்கு இணங்காத வகையில் தென் மாகாண ஆளுநருக்கு மேலதிகமாக டொயோட்டா ஜீப் வண்டியும் ஒதுக்கப்பட்டு இருந்தது. | மேலே குறிப்பிடப்பட்ட ஜனாதிபதி செயலக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மாகாண சபை கௌரவ ஆளுநர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு செலுத்துதல் தொடர்பிலான ஒழுங்கு விதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன எனவும், 2019 ஏப்ரல் 10 ஆம் திகதியின் பின்னர் மாகாண சபைகள் கலைக்கப்பட்டதுடன் மாகாண ஆளுநர்களின் கடமைப் பரப்பு விரிவடைந்ததனால் மேலதிக எரிபொருள் பெற்றுக்கொள்ள நேர்ந்துள்ளது எனவும் கௌரவ ஆளுநர்களின் கடமைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வாகனம் திருத்தல் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்ட சந்தர்ப்பங்களில் ஒதுக்கப்பட்ட வாகனமாக மற்றும் ஒரு வாகனத்தினை கௌரவ ஆளுநருக்காக ஒதுக்கப்பட்டு இருந்தது எனவும் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒதுக்கப்படக்கூடிய 03 வாகனங்களுக்காக 04 வாகனங்கள் அல்ல என்பது. | அரச செலவின முகாமைத்துவம் மற்றும் தேசிய கொள்கைகள் தொடர்பில் கவனத்துடன் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.2 தலைப்பு 301 - சபை செயலாளர் அலுவலகம்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2010 ஓகஸ்ட் 09 ஆம் திகதி இடப்பட்ட தென் மாகாண ஆளுநர் செயலகத்தின் இலக்கம் G/SP/1/57 தொகுதி 01 கொண்ட கடிதம் | 2020 ஆகஸ்ட் மாதம் முதல் 2022 ஒக்தோபர் மாதம் வரையிலுமான காலத்திற்குரிய தென் மாகாண சபையின் தலைவருக்கு வீடொன்றினை வாடகைக்கு எடுப்பதற்க ரூபா 1,350,000 ஆன படியொன்று மேற்படி கடிதத்திற்கு இணங்காத வகையில் செலுத்தப்பட்டிருந்தது. | 2022 ஒக்டோபர் மாதம் தொடக்கம் இந்த கொடுப்பனவைச் செலுத்துதல் நிறுத்தப்பட்டிருந்தது என்பது. | இணங்காத வகையில் செலுத்தப்பட்டிருந்த வாடகைத் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | ஜனாதிபதி செயலக சுற்றறிக்கை | | | |
| | i. 2018 ஒக்டோபர் 12 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் PS/CSA/11-18 கொண்ட சுற்றறிக்கையின் 1 ஆவது பிரிவு | மாகாண சபை கலைக்கப்பட்டதன் பின்னர் அலுவலகக் கொடுப்பனவு செலுத்த முடியாத போதிலும் தென் மாகாண சபையின் தலைவருக்கு 2019 ஒக்டோபர் மாதம் தொடக்கம் 2022 ஒக்டோபர் மாதம் வரையில் அலுவலக கொடுப்பனவாக ரூபா.1,850,000 செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் அலுவலகக் கொடுப்பனவு தொடர்பில் எதுவிதமான குறிப்புகளும் குறிப்பிடப்படவில்லை என்பதும், அந்த சுற்றறிக்கையில் உள்ளடக்கப்படாத வேறு கொடுப்பனவுகள் செலுத்துவதை தவிர்க்குமாறு குறிப்பு இல்லை என்பது மற்றும் தென் மாகாண பிரதான செயலாளர் இலக்கம் CSS/7/1/2 கொண்டதும் மற்றும் 2019 மே 31 ஆம் திகதி இடப்பட்ட கடிதத்தில் வழங்கப்பட்டிருந்த அனுமதியின் பிரகாரம் இந்த கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது என்பதும், 2022 ஆம் ஆண்டின் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | போது வெளியிடப்பட்ட பீஎஸ்/சீஎஸ்ஏ/11-18(1) ஆம் இலக்க மற்றும் (11) ஆம் இலக்க சுற்றறிக்கைகளுக்கு இணங்க 2022 ஒக்தோபர் மாதம் முதல் இந்த கொடுப்பனவு செலுத்தல் நிறுத்தப்பட்டுள்ளமை. | |
| ii. | 2018 ஒக்டோபர் 12 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் PS/CSA/11-18 கொண்டதுமான சுற்றறிக்கையின் 4.1 பிரிவு | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் டீசல் வாகனத்திற்கான 500 லிட்டர் எரிபொருள் உரிமம் இருந்த போதிலும் தென் மாகாண ஆளுநரின் 2019 ஜூலை 9 ஆம் திகதி இடப்பட்ட கடிதத்தின் பிரகாரம் டீசல் வாகனத்திற்கு 600 லிட்டர் எரிபொருள் பெற்றுக் கொண்டு உள்ளமையால் 2019 ஜூலை மாதம் தொடக்கம் 2022 செப்டம்பர் மாதம் வரையில் 3,900 லிட்டர் டீசலுக்காக ரூபா. 708,000 தென் மாகாண சபை தலைவருக்கு செலுத்தப்பட்டிருந்தது. மேலும், சுற்றறிக்கை அறிவுறுத்தவர்களுக்கு இணங்காத வகையில் சூப்பர் டீசல் விலையினை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையால் ரூபா.682,525 மேலதிக தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கௌரவ தலைவரின் இரு உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக ஒரு வாகனத்திற்கு 600 லிட்டர் டீசல் வீதம் 2019 ஏப்ரல் மாதம் தொடக்கம் எரிபொருள் கொடுப்பனவு வழங்குவதற்கு ஆளுநரின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது எனவும் அரச செலவு முகாமைத்துவம் தொடர்பான சுற்றறிக்கைக்கு அமைய எரிபொருள் கொடுப்பனவு செலுத்தும் போது வழங்கப்பட வேண்டிய எரிபொருள் வகை எது என்பது தொடர்பில் அறிவுரை வழங்கப்பட்டிருக்கவில்லை எனவும் இலக்கம் 2014/1 கொண்ட தேசிய வரவு செலவு சுற்றறிக்கைக்கு அமைய அந்த அறிவுரைகள் 2014 - 2016 ஆம் ஆண்டு காலம் வரையில் மட்டுமே செல்லுபடியாகும் எனவும், அந்த காலத்திற்காக சூப்பர் டீசல் வழங்கப்பட்டுள்ளது எனவும் மற்றும் இலக்கம் 2023/01 கொண்ட பிரதான செயலக சுற்றறிக்கைக்கு அமைய தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள வாகனம் தவிர சபை செயலகத்தின் குழு மற்றும் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | ஒதுக்கப்பட்டுள்ள வாகனங்களுக்கு 2023 ஏப்ரல் 01 ஆம் திகதி தொடக்கம் சாதாரண டீசல் / பெட்ரோல் விலையினை அடிப்படையாகக் கொண்டு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது என்பது. | |
| iii. | 2018 ஒக்டோபர் 12 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் PS/CSA/11-18 கொண்டதுமான சுற்றறிக்கையின் 4.2 பிரிவு | தொடர்புடைய சுற்றறிக்கைக்கு முரணாக தென் மாகாண சபை தலைவரின் இணைப்பு மற்றும் மக்கள் தொடர்பு செயலாளர்களுக்கு 2019 ஒக்டோபர் மாதம் தொடக்கம் 2022 ஒக்டோபர் மாதம் வரையில் மாதாந்தம் ரூபா.50,000 வீதம் ரூபா.3,700,000 வாகன கொடுப்பனவும் மற்றும் உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப்பட்டிருக்காத போது 2019 ஓகஸ்ட் மாதம் தொடக்கம் 2022 ஒக்டோபர் மாதம் வரையிலும் ரூபா.2,516,680 எரிபொருள் கொடுப்பனவும் செலுத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் 3.4 பிரிவின் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்கள் ஒரு உத்தியோகபூர்வ வாகனத்திற்கு உரிமம் கொண்டவர்கள் எனினும் அவர்களுக்கு வழங்குவதற்கு அந்த சந்தர்ப்பத்தில் அலுவலகத்தில் மேலதிக வாகனங்கள் இல்லாமையால் வாகனக் கொடுப்பனவு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது என்பதும் 2022 ஒக்டோபர் மாதம் தொடக்கம் இந்த கொடுப்பனவு வழங்குவது நிறுத்தப்பட்டிருந்தது என்பது. | சுற்றறிக்கைக்கு முரணாக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.3 தலைப்பு 302 - தென் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2019 மே 31 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் | அரச சேவைகள் ஆணைக் குழுவில் 01 பதவியில் 02 உத்தியோகத்தர்களுக்கு 2019 மே மாதம் தொடக்கம் | கௌரவ ஆளுநரின் அனுமதியின் பிரகாரம் தென் மாகாண பிரதான செயலாளரின் 2019 மே 16 ஆம் திகதி | தேசிய கொள்கை மற்றும் அரச சேவை முகாமைத்துவம் |

| | | | |
|---|---|---|---|
| 13/2008(V) கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட 2011 பெப்ரவரி 09 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 13/2008 (IV) கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கை | 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா.2,483,595 எரிபொருள் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. அவற்றில் 2014 ஜனவரி 02 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 01/2014 கொண்ட தேசிய வரவு செலவு சுற்றறிக்கையில் 2.1.3(ii) ஆம் பந்திக்கு இணங்காத வகையில் சூப்பர் பெட்ரோல் மற்றும் சூப்பர் டீசல் என்பவற்றுக்காக ரூபா. 254,780 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | இடப்பட்ட இலக்கம் 02-2019 கொண்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் தென் மாகாண சபையில் உத்தியோகபூர்வ வாகன உரித்துடைய உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு 2019 மே மாதம் தொடக்கம் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக பரீட்சிப்பு செய்யப்பட்டு அறிக்கையிடுவதற்காக சிரேஷ்ட தலைமை உத்தியோகத்தர்களை கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டு அந்தக் குழுவின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பது. | தொடர்பில் அவதானத்துடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 1.5.4 தலைப்பு 303 - தென் மாகாண கூட்டுறவு சேவைகள் ஆணைக் குழு

**முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| கூட்டுறவு சேவைகள் ஓய்வூதிய நிதியத்தின் ஆலோசனை செயற் குழுவின் தலைவருக்கு, 06 உறுப்பினர்களுக்கு மற்றும் 12 உத்தியோகத்தர்களுக்கு 2020 ஜனவரி தொடக்கம் 2022 திசெம்பர் வரையில் ரூபா.3,045,421 ஓய்வூதிய நிதியத்தில் இருந்து கொடுப்பனவாக ஆளுநரின் அனுமதியின் அடிப்படையில் மட்டும் செலுத்தப்பட்டிருந்த போதிலும், நிதியத்திற்கு உரிய கட்டளைத் தொகுதிக்கு அமைய பதவி அணியினருக்கான கொடுப்பனவு அல்லது ஏனைய கொடுப்பனவுகள் தொடர்பான கட்டளையாக எதுவும் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை. | தென் மாகாண சபையின் 2019 இன் 02 ஆம் இலக்க கூட்டுறவு சேவைகள் ஓய்வூதிய சாசனத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையில் நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் கூட்டுறவு விடயப் பொறுப்பு அமைச்சரினால் தீர்மானிக்கப்படுகின்ற தொழிலாளர்களுக்கு செலுத்தப்பட முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய கௌரவ ஆளுநரின் அனுமதியின் அடிப்படையில் அந்த கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது என்பது. | அரச செலவு முகாமைத்துவம் தொடர்பான மற்றும் தேசிய சம்பளக் கொள்கைக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.5 தலைப்பு 304 - தென் மாகாண முதல் அமைச்சு, நிதி மற்றும் திட்டமிடல், சட்டம் மற்றும் ஒழுங்கு, உள்ளூராட்சி, போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவம், சுற்றுலா மற்றும் பொறியியல் சேவைகள் அமைச்சு

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2019 மே 31 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 13/2008(V) கொண்ட அரசு நிர்வாக சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட 2011 பெப்ரவரி 09 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 13/2008(IV) கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கை. | தென் மாகாண பிரதான அமைச்சில் 04 பதவிகளுக்கான 08 உத்தியோகத்தர்களுக்கு 2019 மே மாதம் தொடக்கம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா.6,679,200 எரிபொருள் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. அவற்றில் 2014 ஜனவரி 02 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 01/2014 கொண்ட தேசிய வரவு செலவு சுற்றறிக்கையின் 2.1.3.(ii) ஆம் பந்திக்கு இணங்காத வகையில் சுப்பர் பெட்ரோல் மற்றும் சுப்பர் டீசல் என்பவற்றுக்காக ரூபா.910,415 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கௌரவ ஆளுநரின் அனுமதிக்கு அமைய தென் மாகாண பிரதான செயலாளரின் 2019 மே 16 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 02-2019 கொண்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் தென் மாகாண சபையில் உத்தியோகபூர்வ வாகன உரித்துடைய உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் கொடுப்பனவு 2019 மே மாதம் தொடக்கம் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாகப் பரீட்சிப்பு செய்யப்பட்டு அறிக்கையிடுவதற்காக சிரேஷ்ட தலைமை உத்தியோகத்தர்களைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டு அந்த குழுவின் பரிந்துரைகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பது. | தேசிய கொள்கைகள் மற்றும் அரச செலவு முகாமைத்துவம் தொடர்பில் அவதானத்துடன் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

#### 1.5.5.1 தென் மாகாண வீதிப் போக்குவரத்து அதிகார சபை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் பணிக்கொடை செலவு மதிப்பீட்டின் பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கீட்டுக் கணக்கின் மீதி ரூபா.63,306,577 ஆக இருக்க வேண்டிய போதிலும் நிதி நிலைமைக் கூற்றிற்கு அமைய அந்த மீதி ரூபா.62,410,389 ஆகக் | சேமிப்பு கணக்கிற்கு கிடைத்த வட்டித் தொகை குறைக்கப்பட்டு பணிக்கொடை ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளதால் என்பது. | இலங்கை அரச துறை கணக்கீட்டு தர இலக்கம் 19 இன் பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கீடு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டு இருந்ததனால் ரூபா.896,188 வேறுபாடு அவதானிக்கப்பட்டதுடன் அதன் காரணமாக ஆண்டிக்கான பணிக்கொடை செலவு அந்தத் தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | | |
| (ii) | மீளாய்வாண்டின் இறுதியில் 08 லொக் சீட் இயந்திரங்களைக் (POS Machine) கொள்வனவு செய்வதற்காக ரூபா.1,282,455 பெறுமதியான காசோலையினை எழுதி நிறுவனத்தின் கணக்காளரின் பொறுப்பில் வைக்கப்பட்டு இருந்ததுடன் கணக்காய்வு தினமான 2023 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் 01 ஆம் திகதி வரையிலும் குறித்த இயந்திரம் அதிகாரசபையிடம் கிடைத்திருக்கவில்லை. எனினும் மீளாய்வாண்டின் இறுதியில் அந்த இயந்திரங்களின் பெறுமதி அதிகார சபையின் சொத்துக்கள் கருவிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் குறிப்பிடப்பட்டு இருந்ததனால் சொத்துக்கள் கருவிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா.1.282,455 இனால் அதிகமாக காட்டப்பட்டு இருந்ததுடன் அதற்குரிய தேய்மான செலவு ரூபா.296,826 அதிகமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் இந்த கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது. | இலங்கை அரச துறை கணக்கீட்டு தர இலக்கம் 07 இற்கு அமைய சொத்துக்கள் மற்றும் அதற்குரிய தேய்மானங்கள் அடையாளம் காணப்படுதல் வேண்டும். |
| (iii) | 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் மாகாண தீர்மானிக்கப்பட்ட அபிவிருத்தி மானியத்தின் கீழ் வழங்கல் நிறுவனத்தினால் ரூபா. 3,018,300 பெறுமதியான 115 ஒலிபெருக்கி இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அந்த சொத்துக்கள் மூலதனமாக்கப்படாது இருந்ததனால் சொத்துக்கள் கருவிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி | 2023 ஆம் ஆண்டில் திருத்தப்படும் எனவும் மற்றும் சொத்துக்கள் ஏடும் இற்றைப்படுத்தப்படும் என்பது . | இலங்கை அரச துறை கணக்கீட்டு தர இலக்கம் 07 இற்கு அமைய சொத்துக்கள் மற்றும் அதற்குரிய தேய்மானங்கள் அடையாளம் காணப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அந்தத் தொகையினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (iv) | ரூபா.8,236,900 பெறுமதியான 222 பாதுகாப்பு கமெராக்கள் நிலையான சொத்துக்களாகக் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததால் சொத்துக்கள் கருவிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி அந்தத் தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இலங்கை அரச துறை கணக்கீட்டு தர இலக்கம் 07 இற்கு அமைய சொத்துக்கள் மற்றும் அதற்குரிய தேய்மானங்கள் அடையாளம் காணப்படுதல் வேண்டும். |
| (v) | தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவிற்கு மாற்றப்பட வேண்டிய ரூபா.1,790.180 தொகை நடைமுறைக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன் அந்தத் தொகை மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்தப்பட வேண்டிய செலவாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவிற்குச் செலுத்தப்பட வேண்டியது என்பதால் அதனை தீர்க்கமாக அடையாளம் காணும் வரையில் திரட்டல் அடிப்படையில் கொள்ள முடியாது என்பதால் அவ்வாறு திரட்டப்படாது உள்ளது. எனினும் அது இந்த வருடத்தில் தீர்க்கப்படும் என்பது. | மீளாய்வாண்டிக்கு உரிய செலவுகள் குறித்த வருடத்திலேயே கணக்குகளுக்கு அடையாளம் காணப்படுதல் வேண்டும். |
| (vi) | 2022 ஆம் ஆண்டில் ரூபா.229,000,000 தொகையான திறைசேரி உண்டியல்கள் மீள்கொள்வனவின் போது (REPO) ரூபா.10,000,000 தொகை 01 மாதத்திலும் ரூபா.30,000,000 தொகை 03 மாதத்திலும் ரூபா.59,080,000 தொகை 12 மாதத்திலும் முதிர்ச்சி அடையுமாறு நிலையான வைப்பாக, முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதற்காக பொது நாளேட்டுக் குறிப்பில் கணக்கு திறக்கப்பட்டிருக்கவில்லை. அதே போன்று திறைசேரி உண்டியல் மீள்கொள்வனவு (REPO) மற்றும் நிலையான வைப்பு முதலீடுகளில் இருந்து ரூபா.6,008,800 வட்டி வருமானம் ஈட்டப்பட்டிருந்த போதிலும் அதனை ஈட்டிய முறைமைகள் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | எதிர்வரும் வருடங்களில் (REPO) அல்லது நிலையான சொத்துக்களின் மூலம் ஈட்டப்பட்ட வட்டியினை நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிறுவனத்தின் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பேரேட்டுக் கணக்குகளில் குறிக்கப்படுதல் வேண்டும். அனைத்து வருமானங்களும் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட வேண்டும். |

(ஆ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| தேசிய வரவு செலவு சுற்றறிக்கை | | | |
| நிதி அமைச்சின் 2022 ஏப்ரல் 26 ஆம் தேதி இடப்பட்ட இலக்கம் 03/2022 கொண்ட சுற்றறிக்கையின் 03(vii) ஆம் பந்தி | சுற்றறிக்கையின் பிரகாரம் ஆட்சேர்ப்பு செய்வதற்கு ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருந்த போதிலும், இதுவரையில் நியமனம் செய்யப்படாத பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு செய்தலை பிற்போட வேண்டி இருந்த போதிலும் அதற்கு முரணாக 2022 ஜூன் 24, 27 மற்றும் 28 ஆம் திகதிகளில் 12 ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் மொத்தமாக ரூபா.2,896,161 சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புகளில் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த நிபந்தனைகள் மீறப்பட்டு இருந்ததுடன் அதன் முக்கிய நோக்கத்திற்கு பாதிப்பு ஏற்படாத வகையில் அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 05 ஆவது காரணியை யதார்த்தம் ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. | அரச கொள்கைகளுக்கு ஏற்பவும் சுற்றறிக்கை ஒழுங்கு விதிகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கவும் வேண்டும். |

**1.5.5.2 தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபை**

(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | பாதுகாப்பு கருதுகோலுக்கு அமைய கடன்படுநர் மீதிக்காகப் பொது ஒதுக்கீட்டிற்கு மேலதிகமாக அடையாளம் காணப்பட்ட கடன்படு மீதிக்காக விசேட ஒதுக்கீடுகளை மேற்கொள்ள வேண்டிய போதிலும் அபிவிருத்தி அதிகாரசபையில் ரூபா.2,970,000 பெறுமதியான செயல்படாத | கடனை மீள அறவிட்டுக் கொள்வதற்கான தகைமையை உறுதி செய்த பின்னர் அவ்வாறு இல்லாதவிடத்து அதற்கான ஒதுக்கீட்டினை எதிர்காலத்தில் மேற்கொள்ளுவதற்கு தீர்மானிக்கப்பட்டது என்பது. | அடையாளம் காணப்பட்ட அறவிடப்பட முடியாத விசேட கடன்படுநர்களுக்காக விசேட ஒதுக்கீடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடன்படு மீதிக்காக விசேட கடன் ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | தென் மாகாண முயற்சியாளர் ஊக்குவிப்பு அபிவிருத்திக் கடன் செயல் திட்டத்தின் கீழ் (Speed Loan) செயல்படு கடன்படுநர்களுக்காக நிறுவனத்தில் பேணப்பட்டு வரும் கணினி ஒழுங்கமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள பெறப்பட வேண்டிய கடன் வட்டியான ரூபா.12,296,814 நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் திருத்தப்பட்ட நிதி கூற்றுக்களின் மூலம் திருத்தம் செய்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. | ஆண்டுக்குரிய வட்டியினை அடையாளம் கண்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (iii) | தென் மாகாண முயற்சியாளர் ஊக்குவிப்பு அபிவிருத்திக் கடன் செயல் திட்டத்தின் கீழ் (Speed Loan) செயல்படு கடன்படுநர்களுக்கான வட்டியினைக் கணக்கீடு செய்யும் போது ஒப்பந்தத்தின் பிரகாரம் குறித்த காலத்தில் கடனைச் செலுத்தாத கடன்படுனரிடம் இருந்து கடனை செலுத்தும் வரையில் 03 வருடங்களை விட அதிகரிக்கும் காலத்திற்கு உரிய வட்டியான ரூபா.3,756,742 தொகை கணினி ஒழுங்கமைப்பில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 03 வருடங்களின் பின்னர் கடன்படுநர்களின் கடன் வட்டி மற்றும் கடன்படு மீதி என்பன கணக்கீடு செய்யப்படுவதால் அறவீடு செய்வதில் ஆபத்து காணப்படுகின்றது என்பதால் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை என்பது. | குறித்த காலத்தில் கடனை செலுத்தாத (03 வருட காலம் நிறைவு பெற்ற) கடன்படுநர்களிடம் இருந்து வட்டி அறவிடப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (iv) | தென் மாகாண முயற்சியாளர் ஊக்குவிப்பு அபிவிருத்திக் கடன் செயல் திட்டத்தின் கீழ் (Speed Loan) செயல்படு கடன்படுநர்களுக்காக அதிகார சபையினால் பேணப்பட்டு வரும் கடன் கட்டுப்பாட்டு ஒழுங்கமைப்புக்கு அமைய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி ரூபா.47,668,376 ஆக இருந்ததுடன் நிதிக் கூற்றுகளில் அந்தப் பெறுமதி ரூபா.38,360,005 ஆக இருந்ததால் ரூபா.9,308,371 வித்தியாசம் காணப்பட்டது. | வேறுபாடானது ஆரம்ப மீதியில் காணப்பட்டது என்பதால் அதனை எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | கணக்கீட்டு ஒழுங்கமைப்பிற்கு அமைய மீதி மற்றும் கணினி ஒழுங்கமைப்பிற்கு அமைய காணப்படும் மீதி என்பன நடப்பு காலத்தில் திருத்தப்படுகின்றது என்பது உறுதி செய்து கொள்ளப்படுதல் வேண்டும் என்பதுடன் இணக்கக் கூற்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | மீளாய்வாண்டில் 2022 ஜூன் 20 ஆம் திகதி ஒரு வருட காலத்திற்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா.40,000,000 பெறுமதியான நிலையான வைப்பிற்காக, பெறப்பட வேண்டிய வட்டியில் மீளாய்வாண்டிற்குரிய ரூபா.4,313,425 வட்டி அடையாளம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் திருத்தப்பட்ட நிதிக் கூற்றுகளின் மூலம் திருத்தப்பட்டு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. | நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது காலப் பகுதிக்கு உரிய வருமானங்களை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (vi) | மீளாய்வாண்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ரூபா. 35,000,000 நிலையான வைப்பிற்காக செலவிடப்பட்டிருந்த தொகை, காசுப் பாய்ச்சலில் நிதிப் புழக்கமாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் வருட இறுதியில் கணக்குகள் தயாரிக்கும் போது பிழையினைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது. | காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது மீளாய்வாண்டில் இடம்பெற்ற அனைத்து நிதிப் பாய்ச்சல்களும் சரியான முறையில் அடையாளம் காணப்படுதல் வேண்டும். |

**(ஆ) முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | எடுகோள் அடிப்படையிலான அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 2018 ஆம் ஆண்டில் தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையில் ரூபா.700,000 உம் மற்றும் 2019 ஆம் ஆண்டில் தென் மாகாண விவசாயத் திணைக்களத்தில் ரூபா.1,767,718 உம் ஆக மொத்தம் ரூபா.2,467,718 தொகையினை ஈடுபடுத்தி லபுதுவ விவசாய பண்ணையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த உயிர் வாயு அலகு 2019 ஜூன் 12 ஆம் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2019 ஜூன் மாதம் தொடக்கமே இந்த உயிர் வாயு அலகின் செயல்பாட்டு சிக்கல் தொடர்பாக விவசாயப் பண்ணை முகாமைத்துவத்தினால் பிரதி விவசாயப் பணிப்பாளரிடம் (செயல்திட்டம்) தெரிவிக்கப்பட்டு இருந்த போதிலும் 2022 திசெம்பர் மாதம் வரையிலும் | தற்போது இந்த அலகு செயல்படும் நிலைமையில் இல்லை என்பது ஏற்றுக் கொள்ளப்படுகின்றது எனவும், 2019 ஜூன் மாதம் தொடக்கம் சுமார் ஒரு வருட காலம் இந்த அலகு செயல்பட்டது எனவும், பிரதி விவசாயப் பணிப்பாளரின் கோரிக்கைக்கு அமைய பொறியியல் ஆய்வு நிறுவனத்தினால் அதில் உள்ள திடக் கழிவுகளை அகற்றிய பின்னர் பௌதீக பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், நர்ட் நிறுவனத்திடம் பணம் செலுத்தப்பட்டதன் பின்னர் சுத்தப்படுத்தப்பட்டு அறிக்கையினைப் பெற்று கொடுக்க முடியும் எனவும், அதற்கமைய தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்தினால் உக்கிய துரு கழிவுகளை அகற்றுவதற்கு ரூபா.392,000 தொகைக்கு உடன்படிக்கை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. | ஆரம்பிக்கப்பட்ட செயல் திட்டத்தினை சிறப்பாக நிர்வாகித்து பேணப்பட வேண்டியதுடன் எதிர்பார்க்கப்பட்ட நோக்கத்தினை எட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயல்பாட்டினை முன்னைய நிலைமைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | தென் மாகாண அபிவிருத்தி அதிகார சபையில் தென் மாகாண முயற்சியாளர்கள் ஊக்குவிப்பு அபிவிருத்திக் கடன் திட்டத்தின் கீழ் 2022 ஒக்டோபர் 31 ஆம் திகதியில் காசு ஏட்டிக்கு அமைய பெறுகை மற்றும் கணினி வேலை திட்டத்திற்கு அமைய ரூபா.2,347,414 வித்தியாசம் காணப்பட்டது. 13 பற்றுச்சீட்டு தொடர் இலக்க முறை மோசடியாக மாற்றப்பட்டு கடன் பெறுகைகளில் மொத்தம் ரூபா.149,000 தொகை முறைகேடாகப் பயன்படுத்தியதற்குரியதான தாபன விதிக் கோவையில் இரண்டாம் பகுதியில் முதலாவது அட்டவணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விடய உத்தியோகத்தரிற்கான அடிப்படை விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பணிப்பாளர் சபையின் தீர்மானம் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது என்பது. | காசேடு மற்றும் கணினி வேலைத் திட்டம் என்பவற்றுக்கு அமைய பெறுகைகள் ஒப்பிடப்பட்டு வித்தியாசம் அடையாளம் காணப்பட வேண்டியதுடன் அடிப்படை முறைகேடுகள் தொடர்பில் தாபன விதிக் கோவையின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (iii) | M-CASH மூலம் அறவிடப்பட்ட கடன் தொகை காசு ஏட்டில் குறிப்பிடப்படும் போது 05 மாதம் தொடக்கம் 11 மாதம் வரையிலான கால தாமதத்தினைப் போன்று பற்றுச்சீட்டு வழங்கும் போதும் கடன் இலக்கம், பெயர் குறிப்பிடப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | குறித்த மாதங்களில் M-CASH பெறுமதி வங்கிக் கூற்று கிடைக்கப் பெற்றதன் பின்னர் அடுத்த மாதத்தில் காசேட்டில் குறித்துக் கொள்வதற்கு பெற்றுக் கொடுக்கப்படும் எனவும், அலுவலகமானது கூரை திருத்தல் வேலை காரணமாக வேறு அலுவலகத்தில் இருந்தது எனவும், தவறுதலாக ஏற்பட்டுள்ளது எனவும், M-CASH சேவைக்காக P.I.V தாமதமின்றி கணக்கு பிரிவிற்கு ஒப்படைக்கப்பட வேண்டும் என விடய உத்தியோகத்தரிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது. | பயன்பாட்டு ஆவணங்கள் மற்றும் பிரசுரங்களை பேணிச் செல்லுதல் மற்றும் பராமரித்தல் தொடர்பில் சிறந்த கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை காணப்படுதல் வேண்டும். |

**(இ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | | |
|---|---|---|
| தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடு அந்த நிறுவனங்களின் நோக்கங்கள் மற்றும் செயல்பாடுகளை நிறைவேற்றுவதற்கு ஈடுபடுத்த வேண்டிய போதிலும், ரூபா.44,250,000 ஆன தொகை அதன் நோக்கங்களுக்காக ஈடுபடுத்தப்படாது நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | அதிகாரசபையின் நிலையான வைப்பில் மாத்தறை மாவட்ட ஒன்றிணைந்த கிராம அபிவிருத்தி செயல் திட்டத்தின் சொத்துக்களைத் தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்ட போது கிடைத்த தொகை, கடன் செயல் திட்டத்தின் பிணை தொகை மற்றும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த தசுன கடன் யோசனை திட்டத்தின் தொகை என்பன உள்ளடங்கி உள்ளது என்பது. | குறித்த நிதியானது நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். |

**1.5.5.3 ருஹுணு சுற்றுலாப் பணியகம்**

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | 2022 ஆம் ஆண்டின் ஆரம்ப நாளேட்டுக் குறிப்பு மற்றும் பிரதான பேரேட்டுக்கு அமைய 05 கணக்கு விடயங்களில் ரூபா.38,779,461 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | பிரதான பேரேடு மீண்டும் சரியாக குறிக்கப்படும் என்பது. | நாளேட்டுக் குறிப்பு மூலம் திருத்தப்படுதல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டில் 23 நாளேட்டுக் குறிப்புகளுக்கு (ஆரம்ப மீதிகளுக்கு உரிய நாளேட்டுக் குறிப்புகள் தவிர) உரியதாகக் குறிக்கப்பட்ட மொத்தம் ரூபா.24,650,273 பிரதான பேரேட்டுடன் சரியாகப் பொருந்தவில்லை. | பிரதான பேரோடு உடனடியாகத் தயாரிக்கப்பட்டு திருத்தப்படும் என்பது. | பிரதான பேரேடு திருத்தப்படுதல் வேண்டும். |

**(ஆ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | | |
|---|---|---|
| ருகுணு சுற்றுலாப் பணியகத்திற்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடு அந்த நிறுவனங்களின் நோக்கம் மற்றும் செயல்களை நிறைவேற்றுவதற்கு ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும், ரூபா.19,144,036 ஆன தொகை அதன் நோக்கத்திற்காக ஈடுபடுத்தப்படாது நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | நிறுவனத்தினை தாபிப்பதை அடிப்படையாகக் கொண்ட சட்டங்கள் நிலையான வைப்புகளில் நிதியினை முதலீடு செய்வதைக் கட்டுப்படுத்தவில்லை. ருஹுணு சுற்றுலாப் பணியகத்தின் நிலையான வைப்புகளில் நிறுவனத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் செயல் திட்டங்களில் இருந்து ஈட்டப்படும் வருமானம் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது. | குறித்த தொகை நிறுவனத்தின் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். |

**(இ) விளைவற்ற / குறை பயன்பாடுடைய சொத்துக்கள்**

| | | |
|---|---|---|
| 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா.1,391,298 பெறுமதியான ருஹுணு சுற்றுலாப் பணியகத்திற்கு சொந்தமான அம்பலாங்கொடை தகவல் மத்திய நிலையம் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் குறை பயன்பாடுடன் காணப்பட்டது. | பணிப்பாளர் சபையுடன் கலந்துரையாடப்பட்டு உடனடியாக இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | இந்தக் காணியைப் பணியகத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.6 தலைப்பு 305 - தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம்

**(அ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | சுகாதார சேவை உதவியாளராக சேவையாற்றிய ஒருவர் போதைப் பொருளை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டிற்காக 2020 ஒக்டோபர் 21 ஆம் திகதி தொடக்கம் வேலையில் இருந்து நிறுத்தப்பட்டு இருந்ததுடன் 2021 ஜூலை 02 ஆம் திகதி வழக்கு தீர்ப்பின் அடிப்படையில் குற்றவாளியாக இருந்த போதிலும், ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது தொடர்ச்சியாக தாமதப்படுத்தப்பட்டு வந்துள்ளது. 2021 ஜூன் தொடக்கம் 2022 | அமைச்சினால் விசாரணை நிறைவு செய்யப்பட்டு அறிக்கையிடப்படாத காரணத்தால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்பது. | உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கைகள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நவம்பர் வரையிலும் அரை சம்பளம் செலுத்தப்பட்டு இருந்ததுடன் பெற்றுக் கொள்ளப்பட்ட பேரிடர் கடன், சொத்து கடன் மற்றும் துவிச்சக்கர வண்டி கடன் என்பவற்றின் கூட்டுத் தொகையாக ரூபா.306,536 மீதி 2022 டிசம்பர் 31 ஆம் திகதியில் அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது. | | |
| (ii) | 2021 ஆம் ஆண்டில் கிராம சுகாதார அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் கம்புருபிட்டிய மற்றும் தங்கல்லை வைத்தியசாலைகளுக்கு வழங்கி பொருத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் அடிப்படையில் (Supply Installation And Commission) ரூபா.13,681,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 04 இயந்திரங்கள் 2022 டிசம்பர் பெறப்பட்டதன் பின்னர் வைப்பு கணக்கில் வைக்கப்பட்டிருந்த நிதியினை விடுவித்து கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாயவாண்டின் இறுதி வரையிலும் இயந்திரங்களுக்கான தாங்கும் கருவிகள் மற்றும் துணைக் கருவிகள் இல்லாமையால் செயல்படுத்தப்படாது இயங்காத நிலையில் காணப்பட்டது. | 2021 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியின் மூலம் கருவிகளைப் பெற்றுக் கொள்ளுதல் மிகவும் இலாபகரமானது என்பதால் பொது வைப்பில் இடப்பட்டு 2022 ல் வழங்கப்பட்டதன் பின்னர் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது என்பது. | தேவையான அடையாளம் காணல்கள், கொள்முதல் மற்றும் கொள்வனவு செய்தல் என்பவற்றின் நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்ட பின்னர் கொடுப்பனவு செய்யப்படுதல் வேண்டும். |

**(ஆ) வாகனப் பயன்பாடு**

| | | |
|---|---|---|
| எல்பிடிய ஆதார வைத்தியசாலையின் மருத்துவ அவசர ஊர்தியினை 2022 ஏப்ரல் 11 ஆம் திகதி ரூபா.363,192 மதிப்பீட்டுக்கு அமைய, தனியார் நிறுவனத்திடம் திருத்தல் வேலைக்காக ஒப்படைக்கப்பட்டு அதற்காக 2022 மே 19 ஆம் திகதி ரூபா.362,753 இற்கான விலைப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீண்டும் வாகனத்தில் ஏற்பட்ட குறைபாடு காரணமாக ரூபா.651,019 பெறுமதியான மதிப்பீட்டின் அடிப்படையில் திருத்தல் | கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்படுகின்றது எனவும் அந்த இரு திருத்த வேலைகளின் பின்னர் மீண்டும் ஏற்பட்ட குறைபாடு காரணமாக மூன்றாவது தடவையும் திருத்த வேலைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதற்காகதி திணைக்களத்தின் இயந்திரப் பொறியியலாளரினால் பரிந்துரை பெற்றுக் கொடுக்க முடியவில்லை என அல்பிட்டிய வைத்தியசாலையின் வைத்திய | உடனடியாகத் திருத்தப்பட்டு உற்பத்தித் திறனான பயன்பாட்டிற்கு பெற்றுக் கொள்ள வேண்டியதுடன் இதற்குக் காரணமான காரணிகளைக் கண்டறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வேலைக்காக 2022 மே 25 ஆம் தேதி வாகனம் குறித்த நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த திருத்த வேலையின் பின்னரும் வாகனத்தின் குறைபாடு சரி செய்யப்படாததால் 2022 நவம்பர் 28 ஆம் திகதி மீண்டும் ரூபா.1,679,877 பெறுமதியான மதிப்பீட்டின் அடிப்படையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இயந்திர பொறியியல் அலகின் பரிந்துரைகள் அவ்வப்போது மாற்றம் அடைதல் மற்றும் முறையாக கிடைக்காததன் அடிப்படையில் 2023 பிப்ரவரி 23 ஆம் திகதி வரையில் அவசர ஊர்தி திருத்தப்படாது குறித்த நிறுவனத்திலேயே உள்ளது. | அதிகாரிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதால் அல்பிடிய வைத்தியசாலை அபிவிருத்தி முகாமைத்துவக் குழு எடுத்த தீர்மானத்தின் அடிப்படையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் குழுவின் மூலம் இதற்கான பரிந்துரையைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது. | |

**(இ) இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | | |
|---|---|---|
| தென் மாகாண நிதி விதி 54.6 இன் பிரகாரம் நட்ட சேதம் ஏற்பட்ட நாள் தொடக்கம் மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மாகாண சபையில் ரூபா.8,409,183 பெறுமதியான 15 வாகன விபத்துகள் தொடர்பில் தென் மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>அதே போன்று, மேலும் அறவிடப்பட வேண்டிய அல்லது நீக்கப்பட வேண்டிய அல்லது கைவிடப்பட்ட வேண்டிய நட்டங்களின் கீழ் ரூபா.20,573,125 பெறுமதியான 40 சம்பவங்கள் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விபத்துக்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பிலான உரிய நடவடிக்கையை உடனடியாகப் பூர்த்தி செய்து கணக்காய்விற்கு அறிக்கையிடப்படும் என்பது. | நிதி விதிகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**(ஈ) சொத்து முகாமைத்துவம்**

| | | |
|---|---|---|
| கோனபினுவள, அல்பிட்டிய, அக்மீமன, ஹபராதுவ மற்றும் போபே போத்தல ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் அமைந்துள்ள காணிகளின் உரிமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br>அதற்கு அமைய ஒரு சில காணிகள் | அவதானிப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. காணி சிக்கல்களைத் தீர்த்தல் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பது. | அனுமதியற்ற குடியிருப்பாளர்களை அகற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது போன்றே காணிகளின் உரிமையைக் கைப்பற்றுவதற்கும் |

| | | |
|---|---|---|
| அனுமதியற்ற குடியிருப்பாளர்களினால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு அனுபவித்து வருகின்றமை இடம்பெற்றுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | | நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.7 தலைப்பு 306 - தென் மாகாண, மாகாண நிர்வாகத் திணைக்களம்

**(அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| i. | 2019 மே 31 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 13/2008(V) கொண்ட அர நிர்வாக சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட 2011 பிப்ரவரி 9 ஆம் தேதி இடப்பட்ட இலக்கம் 13/2008(IV) கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கை | தென் மாகாண, மாகாண நிர்வாக திணைக்களத்தில் 01 பதவியில் 02 உத்தியோகத்தர்களுக்கு 2019 மே மாதம் தொடக்கம் 2022 டிசம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா.1,757,590 எரிபொருள் கொடுப்பனவாக வழங்கப்பட்டிருந்தது.<br>அவற்றில் 2014 ஜனவரி 02 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 01/2014 கொண்ட தேசிய வரவு செலவு சுற்றறிக்கையின் 2.1.3(ii) ஆம் பந்தியுடன் இணங்காத வகையில் சுப்பர் பெட்ரோல் மற்றும் சுப்பர் டீசலுக்காக ரூபா.222,960 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கௌரவ ஆளுநரின் அனுமதியின் பிரகாரம் தென் மாகாண பிரதான செயலாளரின் 2019 மே 16 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 02-2019 கொண்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் தென் மாகாணத்தில் உத்தியோகபூர்வ வாகன உரிமை உடைய உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் கொடுப்பனவு 2019 மே மாதம் தொடக்கம் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை இடுவதற்காக சிரேஷ்ட தலைமை உத்தியோகத்தர்களைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டு அந்தக் குழுவின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பது. | தேசியக் கொள்கைகள் மற்றும் அரச செலவு முகாமைத்துவம் தொடர்பாக அவதானத்துடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| ii. | 1988 இன் 74 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்ட 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை வெளிப்படுத்தல் சட்டம் மற்றும் 2007 மே 18 | காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் 49 மாகாண நிர்வாக நிறுவனங்களுக்கு தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்பட்ட 1,131 உறுப்பினர்களில் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையில் முறையே 536 உறுப்பினர்கள், 652 உறுப்பினர்கள், 739 உறுப்பினர்கள், 689 உறுப்பினர்கள் மற்றும் 771 | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றைச் சமர்ப்பித்திருக்காத உறுப்பினர்கள் தொடர்பில் யாரால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது தொடர்பில் மாகாண நிர்வாக ஆணையாளரின் 2023 மே 9 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தின் மூலம் தென் மாகாண பிரதான அமைச்சு செயலாளரிடம் ஆலோசனை கோரப்பட்டு இருந்தது என்பதால் அது | தொடர்புபட்ட ஒழுங்கு விதிகளுக்கு அமைய குறித்த சொத்து வெளிப்பாடுகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் SP/CSA/7/07 கொண்ட ஜனாதிபதி செயலாளர் சுற்றறிக்கை | உறுப்பினர்கள் வருடாந்தம் தமது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றை சமர்ப்பித்திருக்கவில்லை. | தொடர்பாக பின்னர் உரிய தீர்மானத்தின்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு அறிக்கையிடப்படும் என்பது. | |
| iii. | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(8),(9) ஆம் பிரிவுகள் | மிகைவிதிப்பு தொடர்பில் கணக்காய்வாளரின் தீர்மானத்தினைத் தெரிவிக்கும் திகதி தொடக்கம் 14 நாட்களுக்குள் மிகைவிதிப்பாளரினால் மாகாண சபை ஆணையாளருக்கு குறித்த தொகையினை செலுத்துதல் வேண்டும். அவ்வாறு பணத்தினை செலுத்தவில்லை எனில் அல்லது மேன்முறையீடு செய்யப்படவில்லை எனில் குறித்த நபர் வசிக்கும் பிரதேசத்தின் நீதிமன்ற அதிகாரம் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் விண்ணப்பித்து குறித்த தொகையினை அறவிடுவதற்கு மாகாண நிர்வாக ஆணையாளரினால் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், கணக்காய்வாளரினால் பல்வேறு சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா.9,195,274 பெறுமதியான 11 மிகைவிதிப்பு பத்திரங்களுக்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதன் தீர்மானத்திற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | • காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் முறையே 02 மற்றும் 05 மிகைவிதிப்புக்கான மேன் முறையீட்டு விசாரணை அறிக்கை அமைச்சின் செயலாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் தீர்ப்பு தெரிவிக்கப்பட்டு இருக்கவில்லை என்பதும்,<br>• மாத்தறை மாவட்டத்தில் 01 மிகைவிதிப்புக்கு உரியதான 02 மிகைவிதிப்பாளர்களுக்கு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளதுடன், அதில் ஒரு மிகை விதிப்பாளருக்கு ஒரு மாதத்திற்கு ரூபா.50,000 வீதம் ஒரு வருடத்திற்குள் செலுத்தப்பட வேண்டும் என நீதிமன்றத்தினால் 2023 மே 3 ஆம் திகதி கட்டளையிடப்பட்டுள்ளது. மற்றைய மிகைவிதிப்பாளருக்கு 2023 ஜூலை 05 ஆம் திகதி மீண்டும் மாத்தறை நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது எனவும், அதே போன்று மாத்தறை மாவட்டத்திற்குரிய 03 மிகைவிதிப்புகளுக்கு உரிய படிவங்களின் பிரகாரம் விசாரணை அறிக்கை பெற்றுக் கொடுக்குமாறு மாத்தறை மாகாண நிர்வாக உதவி ஆணையாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது என்பது. | மிகைவிதிப்பு தொகையை நடப்பு காலத்தில் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**(ஆ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| தென் மாகாணத்தில் 49 மாகாண நிர்வாக நிறுவனங்களில் 19 நிறுவனங்கள் முறையான கழிவு முகாமைத்துவ முறைமையினை செயல்படுத்தாததனால் ''அனைத்து மாகாண நிர்வாக நிறுவனமும் முறையான கழிவு முகாமைத்துவ முறையினை நடைமுறைப்படுத்துகின்றது என்பதனை உறுதிப்படுத்துதல்'' எனும் நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 49 மாகாண நிர்வாக நிறுவனங்களில் 19 நிறுவனங்கள் முறையான கழிவு முகாமைத்துவத்தினை கொண்டிருக்காததற்கு காரணமாக மாகாண நிர்வாக நிறுவனங்களில் இட வசதி போதிய அளவில் இல்லாமை, நிலையான காணி இல்லாமை, போதிய அளவு நிதி ஒதுக்கீடு இல்லாமை, இயந்திர உபகரணங்களின் தட்டுப்பாடு, பயிற்சி பெற்ற ஊழியர்களின் தட்டுப்பாடு மற்றும் மக்கள் எதிர்ப்பு போன்ற சிக்கல்களும் இதில் தாக்கத்தினை ஏற்படுத்தி உள்ளது என்பது. | சுற்றாடல் பாதுகாப்பு வேலைத் திட்டமாக மாற்று வழிமுறை மூலம் அனைத்து மாகாண நிர்வாக நிறுவனமும் கழிவு முகாமைத்துவ முறையினை செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.8 தலைப்பு 307 - தென் மாகாண ஆயுர்வேத திணைக்களம்**

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| தென் மாகாண பிரதான அமைச்சின் மூலம் கடந்த வருடத்தில் ரூபா.18,560,789 செலவிடப்பட்டு புதுப்பிக்கப்பட்டு இருந்த 03 ஆயுர்வேத வைத்தியசாலைகள் கொவிட் வாட்டுகளின் பெறுமதி மற்றும் மீளாய்வாண்டில் வரல்ல, அபரக்க மற்றும் பெலிஅத்த ஆகிய ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு கிடைக்கப் பெற்றிருந்த 03 மின் பிறப்பாக்கி இயந்திரங்கள் மற்றும் துணைக் கருவிகளின் பெறுமதியான மொத்தம் ரூபா.7,763,700 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது கணக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பது. | அனைத்து சொத்துக்களும் அடையாளம் காணப்பட்டு கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

(ஆ) **போதியளவு அதிகாரத்தினால் சான்றுபடுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

**வரம்புகளைப் பின்பற்றாமை**

**வணிக முற்பணக் கணக்கு**

| | | |
|---|---|---|
| தென் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தில் பெலிஅத்த மருந்து உற்பத்தி முற்பணக் கணக்கிற்கு உரியதாக மீளாய்வாண்டில் அனுமதி வழங்கப்பட்டிருந்த பெறுகைகளின் ஆகக் குறைந்து வரம்பு ரூபா.1,779,469 இனை எட்டியிருக்கவில்லை என்பதுடன் பற்று மீதியின் ஆகக் கூடிய வரம்பு ரூபா.2,701,613 இனால் விஞ்சி இருந்தது. | தென் மாகாண ஆயுர்வேத திணைக்களத்தினால் மருந்து உற்பத்தி நிலையத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா.18,061,611 தொகையினை செலுத்துவதற்கு போதிய அளவு நிதி இருந்திருக்குமாயின் முற்றிலுமாகத் திருத்தப்பட்ட பெறுகை வரம்பு மற்றும் பற்று மீதி வரம்பினை எட்டக் கூடியதாக இருக்கும் என்பது. | வரம்புகளைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

(இ) **பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள்**

| | | |
|---|---|---|
| பெலிஅத்த உற்பத்தி நிலையத்தின் வணிக முற்பணக் கணக்கிற்கு அமைய மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் ஆயுர்வேத திணைக்களத்தின் பெயரில் ரூபா.18,061,611 கடன்பட்டு மீதி காணப்பட்ட போதிலும் அந்தப் பெறுமதி ஆயுர்வேத திணைக்களத்தின் நிதிக் கூற்றுகளில் பொறுப்புகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் திருத்தப்படும் என்பது. | நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சரியாக மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 1.5.9 தலைப்பு 308 - தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணிகள் அபிவிருத்தி, பெருந்தெருக்கள் மற்றும் செய்தி அமைச்சு

(அ) **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (i) | 2022 நவம்பர் 25 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 08/2022 கொண்ட | தொடர்புடைய சுற்றறிக்கை ஒழுங்கு விதிகளுக்கு முரணாக தென் மாகாணக் கல்வி அமைச்சினால் ரூபா.4,864,268 | மொத்த வேலைத் திட்டத்திற்காக கௌரவ ஆளுநரிடமிருந்து கிடைத்த அனுமதியின் அடிப்படையில் 2022 நவம்பர் 29 ஆம் திகதி இந்த வேலைத் | செலவுக் கட்டுப்பாட்டு சுற்றறிக்கைகளுக்கு முரணாக நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | திறைசேரி செயலாளரின் தேசிய வரவு செலவு சுற்றறிக்கை | செலவிடப்பட்டு 2020 கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பத்திர (சா.த) அழகியல் பரீட்சை பெறுபேற்று மதிப்பீட்டு வேலைத் திட்டம் 2022 நவம்பர் 29 ஆம் திகதி நடாத்தப்பட்டு இருந்ததுடன் அந்த செலவினுள் மதிப்பீட்டு வேலைத் திட்டத்தின் பரிசுகளுக்காக ரூபா.2,574,200 மட்டும் செலவிடப்பட்டிருந்தது. | திட்டம் நடத்தப்பட்டது எனவும், அதில் ஆசிரியர்கள் மற்றும் கல்வி சார் ஊழியர்கள் என மொத்தமாக சுமார் 1500 பேருக்கு பரிசில்கள் வழங்குதல் உள்ளிட்ட மொத்த செலவு ரூபா.4,864,268 எனவும் அதில் ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் அதிபர்களுக்கு கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தினால் ருஹுணு ரன்சலு பரிசில்களாக வழங்கப்பட்டுள்ளது எனவும், அதற்கான செலவு ரூபா.2,574,200 என்பது. | மேற்கொள்ளப்பட லாகாது. |
| (ii) | 2019 மே 31 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 13/2008(V) கொண்ட அர நிர்வாக சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட 2011 பிப்ரவரி 9 ஆம் தேதி இடப்பட்ட இலக்கம் 13/2008(IV) கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கை | தென் மாகாண கல்வி அமைச்சில் 04 பதவிகளில் 05 உத்தியோகத்தர்களுக்கு 2022 ஜனவரி மாதம் தொடக்கம் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 2014 ஜனவரி 02 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 01/2014 கொண்ட தேசிய வரவு செலவு சுற்றறிக்கையின் 2.1.3(ii) ஆம் பந்திக்கு இணங்காத வகையில் சிப்பர் பெட்ரோல் மற்றும் சிப்பர் டீசலுக்காக ரூபா.361,905 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கௌரவ ஆளுநரின் அனுமதியின் பிரகாரம் தென் மாகாண பிரதான செயலாளரின் 2019 மே 16 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 02-2019 கொண்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் தென் மாகாணத்தில் உத்தியோகபூர்வ வாகன உரிமை உடைய உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் கொடுப்பனவு 2019 மே மாதம் தொடக்கம் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை இடுவதற்காக சிரேஷ்ட தலைமை உத்தியோகத்தர்களைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டு அந்தக் குழுவின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பது. | தேசிய கொள்கைகள் மற்றும் அரச செலவு முகாமைத்துவம் தொடர்பில் அவதானத்துடன் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 1.5.9.1 தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இற்கு அமைய ஓய்வூதியப் பணிக்கொடை | நிதியம் மற்றும் அதற்கு நேரொத்த முதலீடு ஒன்று தற்பொழுது பேணப்பட்டு வருகின்றது. அதற்காக | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 19 இற்கு அமைய நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | நலன்களை (Gratuity) செலுத்துவதற்கு நிதி மற்றும் அதற்கு நேரொத்த முதலீடு ஒன்றை ஆரம்பித்து பேணிச் சென்று இருக்கவில்லை. | மாதாந்தம் ரூபா.1,000,000 வீதம் நிதி கிடைப்பதுடன் அந்தத் தொகையானது வேறாக பேணப்பட்டு வருகின்றது என்பது. | எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ii) | இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இற்கு அமைய சாத்தியமற்ற பொறுப்புக்கள் Contingency Liability தொடர்பான தகவல்கள் கணக்கீட்டு குறிப்புகளின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், அதிகாரசபைக்கு எதிராக, பல்வேறு தரப்பினர்களினால், தொடுக்கப்பட்டிருந்த 25 வழக்குகள் காணப்பட்ட போதிலும், அவை தொடர்பில் கணக்கீட்டு குறிப்புகள் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதே போன்று அந்த வழக்குகளில் அதிகார சபையில் சேவையாற்றிய உத்தியோகத்தர் ஒருவரினால் நட்ட ஈடாக ரூபா.10 மில்லியன் கோரி தொடுக்கப்பட்டிருந்த வழக்கும் உள்ளடங்கும். | எதிர்வரும் வருடத்தில் உள்ளடக்கப்படும் என்பது. | எதிர்வரும் வருடத்தில் உள்ளடக்கப்படும் என்பது. இலங்கை அரச துறை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இற்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (iii) | தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் ஒப்பந்தங்களை வழங்குதல் மேற்கொள்ளப்படும் போது அந்த ஒப்பந்தங்களின் பெறுமதியில் தடுத்து வைக்கப்பட்ட ரூபா.2,587,365 தொகை குறுக்கு குறிப்புகள் மூலம் கணக்கிடப்படாது வேறு நடைமுறைக் கணக்கினுள் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | இந்த அவதானிப்புடன் இணங்கவில்லை என்பது. | கணக்கீட்டுக் குறிப்புகளை இடும்போது ஒரே மாதிரியான கணக்கீட்டுக் குறிப்புகளை இடுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ‘‘பெற வேண்டிய மாகாண தீர்மானிக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்கள்’’ கணக்கில் ஆரம்ப மீதியாக ரூபா.179,890,190 மீதி காணப்பட்டதுடன், முன்னைய வருடத்தில் நடைமுறைப்படுத்தப்படாத 103 செயல்திட்டங்களுக்கான ரூபா.184,790,566 நிதியில் மீளாய்வாண்டில் மேலதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா.176,515,399 தொகை, இந்த கணக்கிற்கு எதிராக நீக்கப்பட்டதன் பின்னர் கணக்கில் எஞ்சியிருந்த ரூபா.3,374,791 மீதி ‘‘வீதி கணக்கின் குறைபாடு’’ என்னும் பெயரிலான கணக்கிற்கு எதுவிதமான அனுமதியும் இன்றி மாற்றப்பட்டிருந்த போதிலும் மேம்பாட்டு வருடத்தில் கணக்கீட்டுக் குறிப்புகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வகைப்படுத்தப்படாத மற்றும் நிலுவையில் உள்ள விலைப் பட்டியல்களின் பெறுமதியான ரூபா.184,790,566 தொகையினை திரட்டிய போதிலும் நாட்டில் நிலவும் கடும் நிதி நெருக்கடி நிலையின் அடிப்படையில் 36 சதவீதத்தை தடுத்து வைப்பதற்காகக் கிடைத்த அறிவுரைக்கு அமைய இந்தத் திரட்டிய தொகையினை இன்னமும் செலுத்துவதற்கு முடியவில்லை என்பதால் அகற்றுவதற்கு நாளேட்டுக் குறிப்பின் மூலம் செய்யப்பட்டது என்பது. | திரட்டிய செலவினை அடையாளம் காணும் போது அது உண்மையான பொறுப்பா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ளாது அவற்றை உருவாக்கலாகாது. அதே போன்று குறித்த கணக்குகளுக்கு உரிய பேரேட்டுக் கணக்கு பேணப்படுதல் வேண்டும். |
| (v) | மொத்த பெறுமதி ரூபா.89,038,112 ஆன கடன்படு மீதி மற்றும் மொத்த பெறுமதி ரூபா.293,617,610 ஆன கடன் தருநர் மீதி என்பன நீண்ட காலம் தொட்டு நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டு வந்துள்ளதுடன், அவற்றை தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திருத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பது. | பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகளில் காணப்படும் மீதியினைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (vi) | கணக்குக் குறிப்பு இலக்கம் 09 இன் கீழ் மாத்தறை மாவட்ட செயலகத்தில் இருந்து பெற வேண்டிய ரூபா.99,903,208 மீதி காணப்பட்ட போதிலும், மாவட்ட செயலகத்தின் 2022 ஆம் ஆண்டின் நிதி கூற்றுகளில் அவ்வாறான மீதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | அதிகாரசபையினால் மாத்தறை மாவட்ட செயலகத்திற்கு இந்த பெற வேண்டிய தொகை குறித்த ஆண்டுகளில் தெரிவிக்கப்பட்டு இருந்தது எனவும் அது தொடர்பில் செலுத்தப்பட வேண்டிய கணக்கு ஒன்று மாவட்ட செயலகத்தின் மூலம் ஏற்படுத்தப்பட வேண்டி உள்ளது என்பது. | நீண்ட காலமாக காணப்படும் பெறவேண்டிய கணக்கினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஆ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | | | |
|---|---|---|---|
| (i) | 2022 பெப்ரவரி 01 ஆம் திகதி தென் மாகாண பிரதான செயலாளருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டிருந்ததன் படி, மீள்சுழற்சி செய்ய முடியாத பிளாஸ்டிக்கை, அஸ்போல்ட் கொங்கிரீட் வீதிகளுக்காக பயன்படுத்தும் தென் மாகாண முன்னோடி வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கும் அம்பாந்தோட்டை - சித்துல்பவ்வ விகாரை வீதியின் 02 கிலோமீட்டரை அபிவிருத்தி செய்வதற்கும் பிரேரிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கமைய குறித்த கைத்தொழில் 2022 செயல்பாட்டு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு இருந்தது. பின்னர் இது தொடர்பில் மதிப்பீடு தயாரிக்குமாறு தென் மாகாண வீதி அபிவிருத்தி சபையின் முகாமையாளர் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்ட பொறியியலாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், இந்த அறிக்கை திகதி வரையிலும் எதுவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீள்சுழற்சி செய்யப்படாத பிளாஸ்டிக்கை, அஸ்போல்ட் கொங்கிரீட் வீதிகளுக்கு பயன்படுத்தும் தென் மாகாண முன்னோடி செயல்திட்ட த்தை நடைமுறைப்படுத்துதல் மீள்சுழற்சி செய்யப்படாத பிளாஸ்டிக்கை, அஸ்போல்ட் கொங்கிரீட் வீதிகளுக்குப் பயன்படுத்தும் தென் மாகாண முன்னோடி செயல்திட்டத்திற்கு தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் திஸ்ஸ பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கு உரிய சித்துல்பவ்வ வீதியில் 02 கிலோமீட்டரை பயன்படுத்துவதற்கு பிரதான செயலாளரின் தலைமையில் 2022 பெப்ரவரி 01 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் முன்மொழிக்கப்பட்டது எனவும் அந்த கூட்டத்தில் அதற்குரிய மதிப்பீடு AGC Innovate தனியார் நிறுவனத்திற்கு பெற்றுக் கொடுப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது எனவும் அதற்கு அமைய மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பது. | செயல்பாட்டுத் திட்டத்திற்கு இணங்க அதில் உள்ளடக்கப்பட்டுள்ள காரணிகளை நடைமுறைப்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் வாகன திருத்த வேலைகளுக்காக வேறான அலகு ஒன்று அமைக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில், அதிகாரசபைக்குச் சொந்தமான வாகனங்களின் திருத்த வேலைகளுக்காக வெளி நிறுவனங்களுக்கு ரூபா.7,400,200 செலவிடப்பட்டிருந்தது. | அலகில் வரையறுக்கப்பட்ட மனித வளங்கள் இதற்காக ஈடுபடுத்தப்படுவதுடன் முழுமையான திருத்த வேலைகளை மேற்கொள்ள வேண்டிய வாகனங்களை இயந்திரப் பொறியியலாளரின் பரிந்துரைக்கு அமைய முறையான விலைமனு ஒழுங்கை பின்பற்றி வெளி நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது என்பது. | வாகன திருத்த வேலைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள அலகின் வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் என்பவற்றை அதிகரிப்பதன் மூலம் வெளி நிறுவனங்களிடம் மேற்கொள்ளப்படுகின்ற பராமரிப்பைக் குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | அட்டுறு செலவினைக் கணக்கீடு செய்யும் போது அடுத்த நிதியாண்டிக்குள் தீர்க்கப்பட வேண்டி உள்ள விலைப்பட்டியல் மற்றும் உரிய செயல்பாடுகளை பூர்த்தி செய்ததன் பின்னர் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் திரட்டிய செலவாகக் கணக்கிடப்பட வேண்டிய போதிலும், உண்மையான திரட்டிய செலவாக இடம்பெறாத மற்றும் எதிர்காலத்தில் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட ரூபா.184,790,566 நிதி திரட்டிய செலவாக குறிப்பிடப்பட்டிருந்ததால் 2021 ஆம் ஆண்டில் செலவானது அந்தத் தொகையினால் அதிகரித்து இருந்தது. அதே போன்று அது கணக்கியல் கொள்கைக்கு முரணாக 2022 ஆம் ஆண்டில் நீக்கப்பட்டு இருந்தது. தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெற வேண்டிய மாகாண தீர்மானம் பெயரில் உண்மையான குறித்த ஆண்டில் செய்யப்பட்ட செயல்களுக்காக பெற வேண்டிய விலைப்பட்டியல் இல்லாத கணக்கொன்று | பெறுமதி ரூபா.184,790,566 ஐத் திரட்டுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட இந்த கைத்தொழிலை பூர்த்தி செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டியது காரணமாக இருந்தது என்பதால் நாட்டில் நிலவும் கடும் நிதி நெருக்கடி நிலைமையின் அடிப்படையில் 36 சதவீதத்தினை தடுத்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது என்பதால் திரட்டப்பட்ட வேலைகளில் தடுத்து வைப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்ட வகைப்படுத்தப்படாத கைத்தொழில்களின் வேலைகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | பெறுகைகளின் போது அவை உண்மையான பொறுப்புகளா என்பதைக் கணக்கீட்டு நியமத்திற்கு அமைய உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பேணிச் செல்லப்பட்டிருந்தது. அதே போன்று முன்னைய ஆண்டில் அதிகார சபையின் செயல்திட்டங்களுக்கு உரிய உண்மையான திரட்டிய செலவு ரூபா.8,275,167 ஆகும். | | |
| (iv) | வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்படும் நிதி அந்த நிறுவனங்களின் நோக்கத்தினை மற்றும் செயல்களை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும், ரூபா. 430,832,721 ஆன நிதி அதன் நோக்கத்திற்காக ஈடுபடுத்தப்படாது நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிலையான வைப்பில் தடுத்து வைத்தல் கணக்கின் மீதி, பொது வைப்புக் கணக்கின் மீதி, பணிக்கொடை கணக்கு மீதி, அதிகார சபையின் கடன் கணக்கு மீதி மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் என்பன மீண்டும் மீண்டும் முதலீடு செய்யப்படுவதன் மூலம் ஈட்டப்பட்டுள்ள நிதிகளில் நிலையான வைப்பு மீதியில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது. | குறித்த தொகை நிறுவனத்தின் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| **(இ)** | **முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்** | | |
| | அஸ்போல்ட் செயற்களத்திற்குப் பொறுப்பாக உள்ள இயந்திரப் பொறியியலாளர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான கணக்காளர் ஆகியோரினால் கலகொட அஸ்போல்ட் செயற்களத்தின் நடவடிக்கைகளுக்குரிய மூலப்பொருள் இருப்புக் கட்டுப்பாட்டு ஒழுங்கமைப்பு அல்லது மொத்த செலவு கணக்கீட்டு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. அதனால் உற்பத்தித் தொகையின் தேவைப்பாட்டினை கடந்து கல் கொள்வனவு செய்யப்பட்டதனால் செயற்களத்தில் 1,047.97$m^3$ தொகையான ரூபா.1,819,012 பெறுமதியான கற்கள் மீதியாகி இருந்ததுடன், அஸ்போல்ட் உற்பத்தியின் பெறுபேறுகளை அளவிடுதலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தொடர்ச்சியான உற்பத்தி நடவடிக்கைகள் இடம்பெற்று வரும்போது மூலப் பொருட்களை கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். நாளொன்றுக்கு ஆகக் குறைந்தது 200 டொன் அஸ்போல்ட் உற்பத்தி செய்யும் இயந்திரத்திற்கு ஒவ்வொரு தடவையும் உகந்த தொகையினை பேணி செல்லுதல் இடம்பெறுதல் வேண்டும். 2015 ஆம் ஆண்டின் பின்னர் வீதி அபிவிருத்தி நடவடிக்கைகள் ஒரே தடவையில் நிறுத்தப்பட்ட காரணத்தால் இந்தத் தொகையினை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தமை குறித்த உத்தியோகத்தர்களின் தவறினால் ஏற்பட்டதல்ல என்பது. | மூலப்பொருள் இருப்புக் கட்டுப்பாடு தொடர்பில் முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும், உற்பத்தியின் பெறுபேறுகளை அளவீடு செய்வதற்கான முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும். |

## (ஈ) நோக்கங்களுக்கு அப்பாற்பட்ட செயல்பாடுகள்

தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 2022 ஆம் ஆண்டின் வருடாந்த திட்டத்திற்கு அல்லது வரவு செலவு ஏட்டிற்கு உள்ளடக்கப்படாத 07 பிரதேச சபை வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கு அதிகார சபையின் வீதி பராமரிப்பு நிதி ரூபா.12,059,884 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்காக குறித்த மாகாண நிர்வாக நிறுவனங்களில் இருந்து கோரிக்கை இல்லாததுடன் அது தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நோக்கங்களுக்கு முரணானது என்பது அவதானிக்கப்பட்டது. அவ்வாறு இருக்க, அது வரையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையில் 27 வீதிகளுக்கு அவசியமான பராமரிப்பு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டி இருந்தது.

வருடாந்த திட்டத்திற்கு அல்லது வரவு செலவு ஏட்டிக்கு உள்ளடக்கப்படாது மாகாண அதிகார பிரதேசத்தினுள் செயல்படுத்தப்பட்ட இந்த அபிவிருத்தி நடவடிக்கை கௌரவ மாகாண ஆளுநரின் அனுமதியின் அடிப்படையில் இடம்பெற்றுள்ளது என்பதும் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் செயல்படுத்தப்படும் ஒரு சில வீதிகள் மத்திய அரசின் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் மற்றும் மாகாண நிர்வாக நிறுவனத்தினால் செயல்படுத்தப்பட்ட வீதிகளும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் இரண்டு நிறுவனங்கள் மூலம் ஒரே கைத்தொழிலுக்காக நிதியினை ஈடுபடுத்தவில்லை என்பது.

மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நோக்கங்கள் மற்றும் விடயப் பரப்பிற்குரிய செயல்களுக்காக முன்னுரிமை பெற்றுக் கொடுக்கப்பட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## (உ) அடையாளம் காணப்பட்ட நட்டங்கள்

தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கலகொட வேலை செயற்களத்தில் பொருத்தப்பட்டுள்ள அஸ்போல்ட் இயந்திர ஏலத்தின் போது மதிப்பீட்டு செயற்பாட்டுக்காக நியமிக்கப்பட்ட குழுவிற்கு நிபுணத்துவ அறிவுடன் கூடிய வெளி தரப்பிலிருந்து ஒரு அங்கத்தவரையேனும் நியமித்திருக்கவில்லை. அந்தக் குழுவின் மூலம் சொத்துக்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட மதிப்பீடு ரூபா.10,400,000 ஆக இருந்த போதிலும் இயந்திர ஏலத்தின் போது ரூபா. 21,100,000 இற்கு விற்பனை செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய மதிப்பீட்டு பெறுமதி

தென் மாகாண பிரதான செயலாளர் அலுவலகத்தின் சட்ட உதவியுடன் இது தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதும் இது தொடர்பிலான கணக்காய்வு விசாரணைக்கு அமைய அதிகார சபையின் மூலம் தற்போது இயந்திரங்களுக்குப் பொறுப்பாக உள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் 2023 மார்ச் 24 ஆம் திகதி பாராளுமன்ற கணக்கீட்டு செயற்குழு கூட்டத்தில் பெற்றுக் கொடுக்கப்பட்ட கட்டளைகளுக்கு அமைய இது தொடர்பில் 2023

விசாரணை நடவடிக்கைகளை விரைவுபடுத்தி குறித்த நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

| | |
|---|---|
| சரியானது அல்ல என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மதிப்பீடு செய்யும் போது இயந்திரத்தினுள் இருந்த 21,782 லிட்டர் தார் மற்றும் 4,028 லிட்டர் டீசல் என்பன தொடர்பில் கருத்தில் கொள்ளாது மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததால் அதிகார சபைக்கு ரூபா.3,274,784 நட்டம் ஏற்பட்டிருந்தது. | ஏப்ரல் 19 ஆம் திகதி பணிப்பாளர் சபை அறிவுறுத்தப்பட்டு, அதற்கான விசாரணை சபையொன்றை நியமிப்பதற்கு 2023 ஏப்ரல் 20 ஆம் திகதி இடப்பட்ட கடிதத்தின் மூலம் அமைச்சின் செயலாளருக்கு கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்பது. |

**1.5.10 தலைப்பு 309 - தென் மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்**

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| திறைசேரி அச்சுக் குறிப்பிற்கு அமைய முற்பணக் கணக்கின் பெறுகைகள் ரூபா.13,911,851 உம் முற்பண கணக்கின் கொடுப்பனவு ரூபா.14,493,833 உம் ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளில் உருவாக்கப்பட்ட காசுப் பாய்ச்சல் தயாரிக்கும் போது முற்பணத்தினை அறவிட்டுக் கொள்ளுதல் ரூபா.9,083,370 ஆகவும் முற்பணம் செலுத்துதல் ரூபா.10,721,730 ஆகவும் குறிக்கப்பட்டதனால் பெறுகைகள் ரூபா.4,828,481 இனாலும் கொடுப்பனவு ரூபா.3,772,103 இனாலும் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | காசுப் பாய்ச்சல் கூற்றினைத் தயாரிக்கும் போது உண்மையாக பணத்தினால் பெறப்பட்ட பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் மட்டுமே எடுக்கப்பட்டன என்பதும் மாற்றல் கட்டளைக்கு அமைய பெறுகை மற்றும் கொடுப்பனவு குறிக்கப்படவில்லை என்பது. | பிரதான செயலாளரின் கணக்கு மற்றும் கொடுப்பனவு இலக்கம் 03/2022 கொண்ட சுற்றறிக்கையின் 07(VI) இற்கு அமைய காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படுதல் வேண்டும். |

**(ஆ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | | |
|---|---|---|
| 2018 ஒக்டோபர் 12 ஆம் திகதிய PS/CS/A/11-18 இலக்கம் கொண்ட ஜனாதிபதி செயலாளர் சுற்றறிக்கையின் 01 பந்திக்கு அமைய மாகாண அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படும் அனைத்து நிறுவனங்களினதும் அலுவலகங்கள் முடியுமான வரையில் அரசுக்கு சொந்தமான கட்டடங்களில் நடாத்தப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், தென் மாகாண காணி ஆணையாளர் திணைக்களம் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தனியார் கட்டடத்தில் நடாத்தப்பட்டு வந்ததுடன், 2015 | காலி நகர சபை புதுப்பித்தல் நடவடிக்கை காரணமாக நகர சபையில் நடாத்தப்பட்டு வந்த அலுவலகத்தினை அகற்றுவதற்கு நேரிட்டுள்ளது என்பது அலுவலக கட்டடம் ஒன்றைக் கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்பது. | அரசுக்கு சொந்தமான கட்டடத்தில் அலுவலகத்தினை அமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும். |

பெப்ரவரி மாதம் தொடக்கம் 2022 திசெம்பர் மாதம் வரையில் கட்டட வாடகையாக ரூபா.25,800,000 செலுத்தப்பட்டிருந்தது.

### 1.5.11 தலைப்பு 310 - தென் மாகாண கல்வி திணைக்களம்

**(அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 139 (10) | உறுதிப்படுத்தும் அதிகாரம் கொண்ட உத்தியோகத்தர் ஒருவரினால் வவுச்சர் உறுதிப்படுத்தும் போது, தற்போது காணப்படும் வங்கி மீதி, அனைத்து கொடுப்பனவுகளையும் தீர்ப்பதற்கு போதுமானதா என உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டிய போதிலும், 2022 திசெம்பர் 31 ஆம் திகதி நிரல் அமைச்சின் வங்கிக் கணக்கு மீதி ரூபா.13,472,279 ஆக இருந்தபோது ரூபா.32,745,899 பெறுமதியான காசோலை ஒன்று வெளித் தரப்பினருக்கு எழுதப்பட்டிருந்தது. அதற்கமைய வங்கி மீதியில் காணப்பட்ட பணத் தொகையினை விஞ்சி, தென் மாகாண கல்வி அமைச்சினால் ரூபா.19,273,620 பெறுமதியான காசோலை ஒன்று எழுதப்பட்டிருந்தது. | தென் மாகாண கல்வித் திணைக்களத்தின் நிரல் அமைச்சு காசேட்டிற்கு அமைய 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் மீதி ரூபா.70,106,281 ஆக இருந்தத்துடன் அத்தினம் அந்த மீதியை விஞ்சி வெளித் தரப்பினருக்கு கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை என்பது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

**(ஆ) அடையாளம் காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| தென் மாகாண கல்வித் திணைக்களம், 2001 ஆம் ஆண்டில், பரீட்சை வினாத்தாள் அச்சிடுவதற்காக, தனியார் நிறுவனத்துடன், ஏற்படுத்திக் கொண்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு மேற்கொள்ளப்படவில்லை என தெரிவித்து வழங்குநரால் 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் | ஆரம்ப விசாரணை அறிக்கையின் பரிந்துரையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பது. | தாபன விதிக்கோவையின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

15 ஆம் திகதி தென் மாகாண கல்விப் பணிப்பாளருக்கு எதிராக வழக்கு தொடுக்கப்பட்டிருந்தது. 2019 மே 23 ஆம் திகதி இடப்பட்ட மேன் முறையீட்டு நீதிமன்ற வழக்கு தீர்ப்பின் பிரகாரம் வழங்குநருக்கு ரூபா.2,448,734 தொகையும் மற்றும் 2021 திசெம்பர் 21 ஆம் திகதி தொடக்கம் தீர்ப்பு வெளியீட்டுத் திகதி வரையில் மேலே குறிப்பிடப்பட்ட தொகையின் அடிப்படையில் வருடாந்தம் 34 சதவீதம் வட்டித் தொகையும் செலுத்தப்பட வேண்டும் எனத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த போதிலும் குறித்த தினத்தில் நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்படாத காரணத்தால் 2022 ஆம் ஆண்டில் திசெம்பர் மாதம் 14 ஆம் திகதி குறித்த தொகையாக ரூபா.2,448,734 உம் வட்டியாக ரூபா.2,228,327 உம் மொத்தமாக ரூபா.4,677,061 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

### (இ) முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | | | |
|---|---|---|---|
| (i) | 2022 ஆம் ஆண்டில் 12 வலயக் கல்வி அலுவலகங்களுக்கு உரிய 355 பாடசாலைகளுள் 225 பாடசாலைகள் கண்காணிப்பிற்காகத் திட்டமிடப்பட்டிருந்ததுடன் அதில் 72 பாடசாலைகள் மட்டுமே கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருந்தது. அதற்கமைய கண்காணிப்பு செய்யப்பட வேண்டிய பாடசாலைகளின் எண்ணிக்கையில் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்ட பாடசாலைகளின் எண்ணிக்கை 32 சதவீதம் மட்டுமாக இருந்ததுடன் 07 வலக் கல்வி அலுவலகங்களில் கடந்த 03 வருடங்களில் ஒரு தடவையேனும் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படாத பாடசாலைகளின் எண்ணிக்கை 45 ஆகும். அதற்கு அமைய பாடசாலை கண்காணிப்பு பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. | 2023 ஆம் ஆண்டு தொடக்கம் முறையான அவதானத்திற்கு அமைய கண்காணிப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதால் வலயத்திற்கு உரிய அனைத்து பாடசாலைகளையும் கண்காணிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | முறையான அவதானத்திற்கு அமைய அனைத்து பாடசாலைகளும் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | ஒரு பாடசாலையில் சேவையாற்றக்கூடிய அதிகபட்ச காலம் 08 வருடங்களாக மட்டும் இருந்த போதிலும், அம்பலாங்கொடை வலயக் கல்வி அலுவலகத்தில் 10 வருடங்களுக்கும் அதிகமான காலம் ஒரே பாடசாலையில் சேவையாற்றும் 137 ஆசிரியர்கள் மற்றும் 14 அதிபர்கள் சேவையாற்றி வருகின்றனர். | 2020 ஆம் ஆண்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் நிலைமையால் அப்போது ஒரே பாடசாலையில் 10 வருட சேவை காலத்தினைப் பூர்த்தி செய்திருந்த ஆசிரியர்களின் இடமாற்றம் இடம்பெறவில்லை என்பதும் 2021 ஆம் ஆண்டின் பாடசாலை மூன்றாம் தவணை 2022 மார்ச் மாதம் வரையில் இடம்பெற்றது என்பதால் 2021 ஆம் ஆண்டில் இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் ஏற்படவில்லை என்பது. | முறையான வகையில் இடமாற்றங்களைச் செயல்படுத்துதல் வேண்டும். |

### 1.5.12 தலைப்பு 311 - தென் மாகாண மீன்பிடி, கால்நடை உற்பத்தி மற்றும் அபிவிருத்தி, சுற்றாடல் அலுவல்கள், கிராமியக் கைத்தொழில், மின்சக்தி மற்றும் கிராமிய தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு

**முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபைக்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீடு அந்த நிறுவனங்களின் நோக்கங்கள் மற்றும் செயல்களை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும், ரூபா.23,645,746 பெறுமதியான நிதி அதன் நோக்கத்திற்காக ஈடுபடுத்தப்படாது நிலையான வைப்புகளில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | தென் மாகாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் நிலையான வைப்புகளில் குறித்த நிறுவனங்களின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் செயல்திட்டங்களில் இருந்து ஈட்டப்படும் வருமானம் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பது. | குறித்த நிதியானது நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

### 1.5.13 தலைப்பு 317 - தென் மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்

#### முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகங்களில் நீதிமன்ற தண்டமாக அறவிடப்பட்டிருந்த மொத்தம் ரூபா.40,215,178 தொகையானது தீர்க்கப்பட வேண்டிய நீதிமன்ற தண்ட மீதியாகக் காணப்பட்டதுடன் இந்தத் தொகையை குறித்த பயனாளி சங்கத்தினை அடையாளம் கண்டு உடனடியாகப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>அதே போன்று, இந்த மீதியில் 2022 ஆம் ஆண்டிற்கு முன்னைய காலத்திற்குரிய அடையாளம் காணப்படாத ரூபா.27,837,307 தொகையும் மீதியாகக் காணப்பட்டது. | நீதிமன்ற தண்டத்தினை தீர்க்கும் செயல்பாட்டுக்காக கருத்தில் கொள்ளத்தக்க காலம் செலவிடப்பட வேண்டும் என்பதால் அதற்கான மென்பொருள் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்பது. | நீதிமன்ற தண்டமாக அறவிடப்பட்டிருந்த இந்த தொகையினை பயனாளி சங்கங்களை அடையாளம் கண்டு உடனடியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | கடன் வழங்கும் போது தவணையாக செலுத்துவதற்கு கடனாளிகளுக்கு நீதிமன்றத்தின் மூலம் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த 41 கூட்டுறவு சங்கங்களுக்கு உரிய ரூபா.7,298,697 பெறுமதியான மொத்த கடன் மீதியில் தவணை செலுத்தப்படாததன் அடிப்படையில் ரூபா.4,750,269 தொகை கடன் மீதியாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்டது. | தீர்க்கப்படாத கடன் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது என்பது. | உரிய கடன் மீதியை உடனடியாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

1.5.14 தலைப்பு 319 - தென் மாகாண சமூக நலன்புரி, நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் II ஆம் தொகுதியின் XLVIII ஆம் பிரிவின் 13.2 உப பிரிவு மற்றும் 2019 செப்டம்பர் 30 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 30/2019 கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கை | ஹல்பாதொட்ட தடுப்புக் காவல் இல்லத்தின் உத்தியோகத்தர் ஒருவரினால் அந்த இல்லத்தில் தங்கி இருந்த 06 ஆண் பிள்ளைகள் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவத்திற்குரிய அடிப்படை விசாரணை நடத்தப்பட வேண்டும் என 2022 ஓகஸ்ட் 08 ஆம் திகதி பிரதான செயலாளர் தெரிவித்திருந்த போதிலும் அது தொடர்பில் எதுவிதமான நடவடிக்கையும் 2023 பெப்ரவரி 16 கணக்காய்வு தினம் வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஆரம்ப விசாரணையைப் பூர்த்தி செய்து உடனடியாக அறிக்கை பெற்றுக் கொடுக்குமாறு உரிய ஆரம்ப விசாரணை மேற்கொள்ளும் உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்பது. | தாபன விதி கோவையின் ஒழுங்கு விதிகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

1.5.15 தலைப்பு 320 - தென் மாகாண தலைமைச் செயலகம்

(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (i) | மீளாய்ண்டின் இறுதியில் பிரதான செயலகத்திற்குச் சொந்தமான 33 வாகனங்களின் பெறுமதியானது மதிப்பீட்டு அறிக்கைக்கு அமைய ரூபா.160,924,000 ஆக இருந்த போதிலும், நடைமுறை அல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றில் ரூபா.112,633,481 ஆக ரூபா.48,290,519 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | வாகனங்களின் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா.160,924,000 ஆன மீதி 2023 ஆம் ஆண்டு நிதி கூற்றின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | சொத்துக்களின் பெறுமதியை சரியாக இனம் கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் ஏடு மற்றும் அட்டவணைகளுக்கு அமைய பிரதான செயலகம் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களுக்கு சொந்தமான காணிகளின் பெறுமதி ரூபா.274,283,000 ஆக இருந்த போதிலும், நிதி அல்லாத சொத்துக்கள் கூற்றில் அந்த பெறுமதி ரூபா.280,680,000 ஆக ரூபா. 6,397,000 அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் சொத்துக்கள் ஏட்டினை தயாரித்த பின்னர் உறுதி செய்யப்பட்ட காணியின் பெறுமதி ரூபா. 274,283,000 என்பதுடன் அது உள்ளிட்ட உரிமம் உறுதி செய்யப்பட்ட மற்றுமொரு காணியின் பெறுமதி 2023 ஆம் ஆண்டு நிதி கூற்றுக்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | காணிகளின் பெறுமதியை சரியாக உறுதி செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (iii) | நிலையான சொத்துக்கள் பதிவேட்டிற்கு அமைய மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் பிரதான செயலகத்திற்கு சொந்தமான கட்டடங்களின் பெறுமதி ரூபா.232,405,500 ஆக இருந்த போதிலும், நிதி அல்லாத சொத்துக் கூற்றிற்கு அமைய மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் கட்டடங்களின் பெறுமதி ரூபா.722,772,409 ஆக இருந்ததால் ரூபா. 490,366,909 வித்தியாசம் காணப்பட்டது. | நிலையான சொத்து ஏட்டினை இற்றைப்படுத்தி பேணுவதுடன் இதுவரையில் ரூபா.232,405,500 பெறுமதி இனம் காணப்பட்டு உள்ளடக்கப்பட்டுள்ளது. எனினும் நிதிக்கூற்றில் உள்ள ரூபா.722,772,409 பெறுமதி தொடர்ச்சியாக இது வரையில் ஏடுகளில் காணப்படும் பெறுமதியாகும். அதற்கு அமைய இந்த சொத்துக்களின் பெறுமதி சரியாக உள்ளதுடன் இந்த பெறுமதியைச் சொத்து ஏட்டில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | கட்டடங்களின் பெறுமதியை சரியாக உறுதி செய்து கொண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**(ஆ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2019 மே 31 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 13/2008(V) கொண்ட அர நிர்வாக சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட 2011 | தென் மாகாண பிரதான செயலகத்தில் 08 பதவிகளுக்கான 17 உத்தியோகத்தர்களுக்கு 2019 மே மாதம் தொடக்கம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா.16,801,524 எரிபொருள் கொடுப்பனவாக | கௌரவ ஆளுநரின் அனுமதியின் பிரகாரம் தென் மாகாண பிரதான செயலாளரின் 2019 மே 16 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 02-2019 கொண்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் தென் மாகாணத்தில் உத்தியோகபூர்வ வாகன உரிமை உடைய | தேசிய கொள்கைகள் மற்றும் அரச செலவின முகாமைத்துவம் தொடர்பில் அவதானத்துடன் நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| பெப்ரவரி 09 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 13/2008(IV) கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கை | செலுத்தப்பட்டிருந்தது. அவற்றில் 2014 ஜனவரி 02 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 01/2014 கொண்ட தேசிய வரவு செலவு சுற்றறிக்கையின் 2.1.3.(ii) ஆம் பந்திக்கு இணங்காத வகையில் சுப்பர் பெட்ரோல் மற்றும் சுப்பர் டீசல் என்பவற்றுக்காக ரூபா.2,040,815 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் கொடுப்பனவு 2019 மே மாதம் தொடக்கம் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை இடுவதற்காக சிரேஷ்ட தலைமை உத்தியோகத்தர்களைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டு அந்தக் குழுவின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பது. | எடுக்கப்படுதல் வேண்டும். |

**(இ) ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 80 மீட்டர் நீளமுடைய தென் மாகாண பிரதான செயலகத்தின் முன்பக்க மதிலை நிர்மாணிப்பதற்காக ரூபா.38,634,000 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் அதற்கமைய தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரருடன் 2021 ஓகஸ்ட் 02 ஆம் திகதி ரூபா 37,362,562 பெறுமதிக்கு (வட் அற்ற) உடன்படிக்கை இடப்பட்டிருந்தது. இது தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணிகள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) இந்த நிர்மாணக் கைத்தொழிலின் முழுமையான வேலையைப் பூர்த்தி செய்தல் 2022 மார்ச் 30 ஆம் திகதி வரையில் 240 நாட்களைக் கொண்ட காலத்தினுள் மேற்கொள்ளுவதற்கு 2021 ஓகஸ்ட் 02 ஆம் திகதி உடன்படிக்கை இடப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்க, 2022 ஜுலை மாதம் 27 ஆம் திகதி நிர்மாணக் கைத்தொழிலின் ஒரு பகுதி மட்டும் பூர்த்தி | ஒப்பந்தக்காரரினால் தொடர்ந்து நிர்மாணப் மூலப்பொருட்கள் விலை அதிகரித்துச் செல்லுதல் மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மிகுதி நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் சிரமம் என தெரிவிக்கப்பட்டிருந்ததன் அடிப்படையில் பிரதான செயலாளரின் 2022 ஜுலை 27 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் CSS/15/02/06/10 கொண்ட கடிதத்தின் மூலம் இரு தரப்பு உடன்படிக்கைக்கு அமைய உடன்படிக்கையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் வேலையை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கும் அரசிற்கு நட்டம் ஏற்படாத வகையில் ஒப்பந்தத்தை முகாமைத்துவப்படுத்திக் கொள்ளுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டு வேலையை நிறைவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டு அந்த பூர்த்தி செய்யப்பட்ட வேலைக்காக ரூபா.15,655,317 தொகையைச் செலுத்தி மேலே கூறப்பட்ட உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. பின்னர் மிகுதி வேலைக்காக ரூபா.42,958,188 இற்குப் புதிய மதிப்பீடொன்று தென் மாகாண பிரதி பிரதான செயலகத்தினால் (பொறியியல் சேவை) முன்வைக்கப்பட்டிருந்ததுடன், அதற்காகப் புதிய விலை மனு கோரப்பட்டு 2022 செப்டம்பர் 09 ஆம் திகதி மேலே கூறப்பட்ட முதலாவது ஒப்பந்தக்காரருடன் ரூபா.34,368,110 இற்கு உடன்படிக்கை இடப்பட்டிருந்தது. | எடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கைத்தொழில் தொடர்பில் 2022 ஓகஸ்ட் 02 ஆம் திகதி பிரதான செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் நிர்மாணிக்கப்பட்ட பக்க மதில் பகுதியின் பின்புறத்தில் மண்ணை நிரப்பி கைத்தொழிலை நிறைவு செய்தல் பொருத்தமானது என கலந்துரையாடப்பட்டது என்பதனால் அந்த வேலைப் பகுதியை நிறைவேற்றிக் கொள்வதற்காக 2022 ஓகஸ்ட் 15 ஆம் திகதி வரையில் காலத்தை நீடித்தல் இடம்பெற்றுள்ளதுடன் அதற்கு அமைய ஒப்பந்தத்தை இரத்து செய்ததுடன் மிகுதி நிர்மாணத்திற்காகப் புதிய மதிப்பீடு ஒன்றை தயாரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது என்பதால் மிகுதி வேலைக்காக ரூபா.42,958,188 மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டு முதலாவது ஒப்பந்தக்காரருடன் ரூபா.34,368,110 இற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது என்பது. | |
| (ii) | அதே போன்று, இரண்டாவது ஒப்பந்தத்தின் படி ரூபா.34,368,110 உம், முதலாவது ஒப்பந்தத்தில் நிறைவேற்றப்பட்ட வேலைக்காக ரூபா.15,655,317 உம் மற்றும் மேலதிக வேலைகளுக்காக ரூபா.9,242,433 உம் உள்ளிட்ட ரூபா. 59,265,860 மொத்த செலவினை ஏற்க நேரிட்டதன் அடிப்படையில் முதலாவது மதிப்பீட்டினை விட ரூபா.20,631,860 அதிக செலவினை ஏற்க நேர்ந்துள்ளதால் அரச செலவு சரியான முறையில் முகாமைத்துவப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | மூலப்பொருள் விலைகள் அதிகரித்தல் மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக கைத்தொழிலில் மிகுதி வேலைப் பகுதியினை மேற்கொள்ளுவதற்குப் புதிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டதுடன் ரூபா.34,368,110 இற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டு மிகுதி நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் ஒப்பந்தம் செய்யும் போது விலை அதிகரிக்கும் கொடுப்பனவிற்கு உடன்பட்டுள்ளது என்பதால் CIDA விலை சூத்திரத்திற்கு அமைய விலை அதிகரிப்பிற்கு ஏற்ப அந்தந்த விலைப் பட்டியல்களுக்கு உரியதாகக் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது என்பது. | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் வேலையை நிறைவேற்றிக் கொள்ளுவதற்கும் அரசிற்கு நட்டம் ஏற்படாத வகையில் ஒப்பந்தத்தை முகாமைத்துவப்படுத்திக் கொள்ளுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.16 தலைப்பு 321 - தென் மாகாண பிரதி பிரதான செயலாளர் (திட்டமிடல்) அலுவலகம்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| 2019 மே 31 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 13/2008(V) கொண்ட அர நிர்வாக சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட 2011 பெப்ரவரி 09 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 13/2008(IV) கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கை | தென் மாகாண பிரதிப் பிரதான செயலாளர் (திட்டமிடல்) அலுவலகத்தில் 02 பதவிகளுக்கான 02 உத்தியோகத்தர்களுக்கு 2019 மே மாதம் தொடக்கம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா.4,215,930 எரிபொருள் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. அவற்றில் 2014 ஜனவரி 02 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 01/2014 கொண்ட தேசிய வரவு செலவு சுற்றறிக்கையின் 2.1.3(ii) ஆம் பந்திக்கு இணங்காத வகையில் சுப்பர் பெட்ரோல் மற்றும் சுப்பர் டீசல் என்பவற்றுக்காக ரூபா.493,960 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கௌரவ ஆளுநரின் அனுமதியின் பிரகாரம் தென் மாகாண பிரதான செயலாளரின் 2019 மே 16 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 02-2019 கொண்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் தென் மாகாணத்தில் உத்தியோகபூர்வ வாகன உரிமை உடைய உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் கொடுப்பனவு 2019 மே மாதம் தொடக்கம் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை இடுவதற்காக சிரேஷ்ட தலைமை உத்தியோகத்தர்களைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டு அந்தக் குழுவின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பது. | தேசிய கொள்கைகள் மற்றும் அரச செலவு முகாமைத்துவம் தொடர்பில் அவதானத்துடன் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**1.5.17 தலைப்பு 323 - தென் மாகாண உள்ளகக் கணக்காய்வுத் திணைக்களம்**

சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| 2019 மே 31 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 13/2008(V) கொண்ட அர நிர்வாக | தென் மாகாண, உள்ளகக் இல்ல கணக்காய்வுத் திணைக்களத்தில் உத்தியோகத்தர் ஒருவருக்கு 2019 மே மாதம் தொடக்கம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா.1,741,765 | கௌரவ ஆளுநரின் அனுமதியின் பிரகாரம் தென் மாகாண பிரதான செயலாளரின் 2019 மே 16 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 02-2019 கொண்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் தென் மாகாணத்தில் உத்தியோகபூர்வ | தேசிய கொள்கைகள் மற்றும் அரச செலவு முகாமைத்துவம் தொடர்பில் அவதானத்துடன் |

| | | | |
|---|---|---|---|
| சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட 2011 பெப்ரவரி 09 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 13/2008(IV) கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கை | எரிபொருள் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. அவற்றில் 2014 ஜனவரி 02 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 01/2014 கொண்ட தேசிய வரவு செலவு சுற்றறிக்கையின் 2.1.3.(ii) ஆம் பந்திக்கு இணங்காத வகையில் சுப்பர் பெட்ரோல் மற்றும் சுப்பர் டீசல் என்பவற்றுக்காக ரூபா.210,390 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | வாகன உரிமை உடைய உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் கொடுப்பனவு 2019 மே மாதம் தொடக்கம் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை இடுவதற்காக சிரேஷ்ட தலைமை உத்தியோகத்தர்களைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டு அந்தக் குழுவின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பது. | நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

**1.5.18 தலைப்பு 324 - தென் மாகாண வருமானத் திணைக்களம்**

**(அ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| 2019 மே 31 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 13/2008(V) கொண்ட அர நிர்வாக சுற்றறிக்கையின் திருத்தப்பட்ட 2011 பெப்ரவரி 09 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 13/2008(IV) கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கை | தென் மாகாண வருமான திணைக்களத்தில் 01 பதவிக்கான இரு உத்தியோகத்தர்களுக்கு 2019 மே மாதம் தொடக்கம் 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா.1,483,503 எரிபொருள் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. அவற்றில் 2014 ஜனவரி 02 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 01/2014 கொண்ட தேசிய வரவு செலவு சுற்றறிக்கையின் 2.1.3.(ii) ஆம் பந்திக்கு இணங்காத வகையில் சுப்பர் பெட்ரோல் மற்றும் சுப்பர் டீசல் என்பவற்றுக்காக ரூபா.237,668 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கௌரவ ஆளுநரின் அனுமதியின் பிரகாரம் தென் மாகாண பிரதான செயலாளரின் 2019 மே 16 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 02-2019 கொண்ட சுற்றறிக்கையின் அடிப்படையில் தென் மாகாணத்தில் உத்தியோகபூர்வ வாகன உரிமை உடைய உத்தியோகத்தர்களுக்கான எரிபொருள் கொடுப்பனவு 2019 மே மாதம் தொடக்கம் செலுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசாரணை செய்து அறிக்கை இடுவதற்காக சிரேஷ்ட தலைமை உத்தியோகத்தர்களைக் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டு அந்தக் குழுவின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்பது. | தேசிய கொள்கைகள் மற்றும் அரச செலவு முகாமைத்துவம் தொடர்பில் அவதானத்துடன் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

(ஆ) **சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| தல்கஸ்யாய தேயிலைத் தொழிற்சாலை அமைந்துள்ள காணியை வேறு தரப்பினரிடம் ஒப்படைப்பதற்குரிய முதலாவது மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா.354,150,000 ஆக இருந்ததுடன், அதற்காக மேன்முறையீடு செய்யப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா.276,000,000 ஆக இருந்ததால் மாகாண வருமான திணைக்களத்தில் சமனான தரத்தில் உள்ள உத்தியோகத்தர்கள் இருவர் இரண்டு சந்தர்ப்பங்களில் வழங்கிய மதிப்பீட்டு பெறுமதிகளுக்கு இடையில் ரூபா.78,150,000 முரண்பாடு காணப்பட்டது. இது தொடர்பில் கணக்காய்வு விசாரணையின் பின்னர் மாகாண வருமான ஆணையாளரினால் நியமிக்கப்பட்ட விசேட குழுவினால் அந்த சொத்து பெறுமதி ரூபா.248,000,000 என மீண்டும் மதிப்பீடு செய்யப்பட்டு இருந்ததால் சொத்து மதிப்பீடு செய்யும் செயல்பாட்டிற்காக முறையான மூலப் பிரமாணம் தயாரிக்கப்படாது ஒவ்வொரு உத்தியோகத்தரினது தற்றுணிவின் அடிப்படையில் மதிப்பீட்டுப் பெறுமதி வழங்கப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள வகையில் கருத்து வெளிப்பாடுகள் மூலம் வழங்கப்பட்டுள்ள இரு மதிப்பீட்டுப் பெறுமதிகளில் வேறுபாடு காணப்படுகின்றது என்பது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது எனவும், திணைக்களத்தினுள் அது வரையில் காணப்பட்ட முறைமைகள், மீளாய்வு செய்யப்பட்டு முறையான மூலப் பிரமாணத்தைத் தயாரிப்பதற்கு 2022 திசெம்பர் 16 ஆம் திகதி குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் மூலப் பிரமாணம் மற்றும் நடைமுறைகள் 2023 ஜனவரி மாதம் தொடக்கம் திணைக்களத்தினுள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய எதிர்காலத்தில் மதிப்பீடுகளில் மாறுபாடுகள் குறைவடையும் என்பது. | சொத்து மதிப்பீடானது தீர்மானிக்கப்பட்ட மூலப் பிரமாணங்களை அடிப்படையாகக் கொண்டு நிலையான தன்மையுடன் இடம்பெறுதல் வேண்டும். |

**1.5.19 தலைப்பு 325 - தென் மாகாண மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம்**

**செயற்பாட்டுத் திறமையீனங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் எலக்ட்ரோனிக் வருமான அனுமதிப் பத்திர (e RL- II Phase two smart office) செயல் திட்டத்திற்கு 2018 மார்ச் மாதம் | இது நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் 09 மாகாணங்களில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தினால் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு | திட்டமிடப்பட்ட வகையில் செயல் திட்டத்தை உடனடியாகப் பூர்த்தி செய்து எதிர்பார்த்த வருமானத்தை முறையாக |

| | | |
|---|---|---|
| இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் நிறுவனத்துடன் உடன்பாட்டு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு ரூபா.5,720,000 செலுத்தப்பட்டு இருந்ததுடன், 2022 ஏப்ரல் மாதம் செயல் திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டு இருந்த போதிலும் அதனைப் பூர்த்தி செய்வதற்கு முடியாது இருந்தது. அதனால் மீண்டும் அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவதற்கு ரூபா.3,075,000 மேலதிக செலவினை ஏற்க நேரிட்டிருந்தது. | ஒப்பந்தமாகும். அதற்காக தென் மாகாண மோட்டார் வாகன போக்குவரத்துதி திணைக்களத்தினால் செலுத்த வேண்டிய ரூபா.9,431,497 தொகையில் ஆரம்பத்தில் செலுத்தப்பட வேண்டிய ரூபா.5,720,000 தொகை உடன்பாட்டு ஒப்பந்தத்திற்கு அமைய செலுத்தப்பட்டிருந்தது எனினும் செயல் திட்டத்தை குறித்த திகதியில் பூர்த்தி செய்யாத காரணத்தால் ரூபா.3,075,000 மேலதிக செலவினை ஏற்க நேரிட்டுள்ள போதிலும், தென் மாகாண சபைக்கு 2022 வரவு செலவு திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட அனுமதிப் பத்திர வருமானத்தை ஈட்டிக் கொடுப்பதற்கு தேவையான சேவை குறைவின்றி நிறைவேற்றப்பட்டு உள்ளது என்பது. | முகாமைத்துவப்படுத்தல் மற்றும் சேகரித்தல் என்பன செய்யப்படுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான மாகாண சபை நிதியத்தின் செயல்பாட்டு பணிகளின் பெறுபேறு ரூபா.777,611,691 சரிவடைந்து இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய வருடத்தில் ரூபா.558,915,389 மேலதிகமாக காணப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1.1 அரச மானியங்கள்

மாகாண குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்கள் (பிஎஸ்டிஜி), மாகாண அபிவிருத்தி மானியங்கள் (பிடீஜி), எடுகோள் அடிப்படையிலான மானியங்கள் (சீபீஜி) மற்றும் ஏனைய அபிவிருத்தி செயல்திட்ட மானியங்கள் என்பவற்றின் பயன்பாட்டிற்குரிய அவதானிப்புகள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| மூலம் | அங்கீகரிக்கப்பட்ட தொகை | செலவிடப்பட்ட தொகை | பணம் கிடைக்காமை |
|---|---|---|---|
| | ரூபா. | ரூபா. | ரூபா. |
| மாகாண குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்கள் (PSDG) | 971,000,000 | 485,500,000 | 485,500,000 |
| எடுகோள் அடிப்படையிலான மானியங்கள் (CBG) | 125,000,000 | 70,000,000 | 55,000,000 |

| | | | |
|---|---|---|---|
| அடிப்படை சுகாதார சேவையை உறுதிப்படுத்தும் வேலைத் திட்டம் (PSSP) | 560,000,000 | 410,000,000 | 150,000,000 |

| கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| தென் மாகாண அபிவிருத்தி திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு மீளாய்வாண்டில் மத்திய அரசின் மானியங்களாக மாகானு குறித்துரைக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்கள் (PSDG) மற்றும் படுகோன் அடிப்படையிலான மானியங்கள் (CBG) மற்றும் அடிப்படை சுகாதார சேவையினை உறுதிப்படுத்தும் வேலை திட்டம் (PSSP) என்பவற்றுக்காக முறையே ரூபா.971மில்லியன், ரூபா.125 மில்லியன் மற்றும் ரூபா.560 நிதி ஒதுக்கீடு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நிதியில் முறையே ரூபா.485.5 மில்லியன், ரூபா.55 மில்லியன் மற்றும் ரூபா.150 மில்லியன் நிதி மீளாய்வாண்டிற்காகக் கிடைத்திருக்கவில்லை. | பௌதிக மற்றும் நிதி முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டு உள்ள போதிலும் நிதி பெறுகை தொடர்பிலான தகவல்கள் அறிக்கையிடப்படவில்லை என்பதால் தீர்மானமான பதிலைப் பெற்றுக் கொடுப்பதற்கு போதியளவு தகவல்கள் இல்லை என்பது. | நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

### 3.1.2 மாகாண அபிவிருத்தி திட்டம்

மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புதிய வேலைகள் மற்றும் நடைமுறை வேலை ஆகியவற்றுக்காக ரூபா.1,095.58 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியுடைய 1,117 மும்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. மாகாணசபையின் செயல் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் பணி மும்மொழிவுகளின் செயல் முன்னேற்றம் பின்வருமாறு.

| விபரம் | புதிய பணி முன்மொழிவுகளின் எண்ணிக்கை | நடைமுறை பணி முன்மொழிவுகளின் எண்ணிக்கை | மொத்த பணி முன்மொழிவுகளின் எண்ணிக்கை | மொத்த பணிகளின் மதிப்பிடப்பட்ட பெறுமதி (ரூபா மில்.) |
|---|---|---|---|---|
| (அ) முழுமையாக நிறைவு செய்யப்பட்ட | 737 | 178 | 915 | 870.47 |
| (ஆ) 50 சதவீதத்தை விட குறைவாக நிறைவு செய்யப்பட்ட | 84 | 02 | 86 | 93.40 |
| (இ) 50 சதவீதத்திற்கு மேலாக நிறைவு செய்யப்பட்ட | 47 | 18 | 66 | 87.60 |
| (ஈ) ஆரம்பிக்கப்படாத | 50 | 01 | 50 | 44.11 |
| | --------- | --------- | ---------- | ------------ |
| மொத்தம் | 918 | 199 | 1,117 | 1,095.58 |
| | ==== | ==== | ===== | ====== |

இது தொடர்பாக அவதானிக்கப்பட்ட காரணிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆம் ஆண்டில் மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாகாண குறித்துரைக்கப்பட்ட எடுகோள் அடிப்படையில், நெகிழ்வான மற்றும் விசேட கிராமிய வேலைத் திட்டங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட 1,117 வேலை முன்மொழிவுகளின் முன்னேற்றத்திற்கு அமைய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் 915 வேலை முன்மொழிவுகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு இருந்ததுடன் 152 வேலை முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது எனினும் 50 வேலை முன்மொழிவுகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட செயல் திட்டங்களுக்கான நிதி கிடைக்காத காரணத்தால் 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா.205.46 மில்லியன் விலைப்பட்டியல் எஞ்சியிருந்ததுடன் அந்தத் தொகை 2023 ஆம் ஆண்டில் வெவ்வேறான நிதியினைப் பயன்படுத்தி தீர்ப்பதற்கு நேரிட்டிருந்தது என்பது. | தொடர் நடவடிக்கைகள் முறையான வகையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதற்கு அமைய மேலும் 172 வேலை முன்மொழிவுகள் அமைச்சு மட்டத்தில் பூர்த்தி செய்வதற்கு இருப்பதனால் அந்தந்த அமைச்சின் ஊடாக அதன் வேலை முன்மொழிவுகளைப் பூர்த்தி செய்தல் தொடர்பில் தொடர் நடவடிக்கைகள் முறையான வகையில் இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அதே போன்று, மீளாய்வாண்டிற்காக மாகாண குறித்துரைக்கப்பட்ட மற்றும் எடுக்கோள் அடிப்படையிலான மானியங்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளில் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் ரூபா.555.5 மில்லியன் ஒதுக்கீட்டுத் தொகை மட்டுமே கிடைத்திருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதியில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட செயல் திட்டங்களுக்கான நிதி கிடைக்காத காரணத்தால் ரூபா.205.46 மில்லியன் கையிலிருந்த விலைப்பட்டியல்களாக எஞ்சியிருந்ததுடன் அந்தத் தொகை 2023 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கீட்டு நிதியின் மூலம் தீர்ப்பதற்கு நேரிட்டிருந்தது. | 2022 திசெம்பர் 31 ஆம் திகதியில் வேலை பூர்த்தி செய்யப்பட்ட செயல் திட்டங்களுக்கான நிதி கிடைக்காத காரணத்தால் ரூபா.205.46 மில்லியன் கையிலிருந்த விலைப்பட்டியல்களாக எஞ்சியிருந்ததுடன் அந்தத் தொகை 2023 ஆம் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி தீர்ப்பதற்கு நேரிட்டிருந்தது என்பது. | தொடர் நடவடிக்கைகள் முறையான வகையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் அபிவிருத்தி திட்டத்திற்காக ரூபா.1,656 மில்லியன் நிதிக்கான (தடுத்து வைப்பதற்கு முன்னர்) அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும், வருடத்தினுள் அந்த அபிவிருத்தி திட்டத்திற்காக திறைசேரியிலிருந்து கிடைத்த நிதி தொடர்பான தகவல்கள் எதுவும் திட்டமிடல் செயலகத்திடம் இருக்கவில்லை. அதனால் திட்டமிடல் செயலகத்தின் மூலம் அபிவிருத்தி திட்டத்தின் கீழான செயல் திட்டங்களின் தொடர் நடவடிக்கைகள் மற்றும் | எதிர்காலத்தில் தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதி பிரதான செயலாளரினால் (திட்டமிடல்) தெரிவிக்கப்பட்டு இருந்தது என்பது. | தொடர் நடவடிக்கைகள் முறையான வகையில் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| முன்னேற்றம் என்பவற்றின் பரீட்சிப்பின் போது முறையான வகையில் தகவல்களைப் பகுப்பாய்வு செய்வதற்கு அது தடையாக இருந்தது. | | |

**4. பதவியணி நிர்வாகம்**

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|
| அரச நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் நிர்வாக மறுசீரமைப்பு அமைச்சு செயலாளரின் 2001 ஓகஸ்ட் 22 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் 18/2001 கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கையின் அரச சேவையின் இட மாற்றம் தொடர்பான கொள்கையின் படி நாடளாவிய சேவைகள், இணைந்த சேவைகள், மாகாண அரச சேவைகள் மற்றும் திணைக்கள சேவைகள் ஆகிய சேவைகளில் உள்ள உத்தியோகத்தர்களின் இடமாற்றம் தொடர்பில் பொதுவான கொள்கை ஒன்று இருக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கமையன் அதிகபட்ச காலமான 05 வருடங்கள் ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றியுள்ள அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் வேறு சேவை நிலையங்களில் சேவையாற்றுவதற்கு இடமளிப்பதற்கு உடனடியாக இட மாற்றத்தினை வழங்க வேண்டும் எனத் தெரிவித்திருந்த போதிலும் தென் மாகாண பிரதான செயலகத்தில் 2022 மே 31 ஆம் திகதியில் 5-13 வருடங்களுக்கு இடையில் சேவைக் காலத்தினை பூர்த்தி செய்திருந்த 19 உத்தியோகத்தர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு இருந்தனர். | சுற்றறிக்கையில் அவ்வாறு குறிப்பிடப்பட்டு இருந்த போதிலும், 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் தாபன விதிக் கோவையின் I ஆவது தொகுதியில் III ஆவது பிரிவின் பிரகாரம் 05 வருடங்கள் ஒரே பதவியில் / சேவை நிலையத்தில் சேவையாற்றியுள்ள அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் இடமாற்றத்தினை வழங்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.<br><br>அதே போன்று, தென் மாகாண சபையில் உத்தியோகத்தர்களுக்கு நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழிந்த புதிய இடமாற்ற விதிகள் தென் மாகாண அரச சேவை ஆணைக் குழுவின் அனுமதிக்காக தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பது. | அரச சேவையின் பொதுக் கொள்கைகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

5. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செலவு தலைப்பு 26 இற்கு உரிய நிகர ஒதுக்கீடுகளில், மொத்தம் ரூபா.2,838,988,856 ஒதுக்கீடு எஞ்சி இருந்ததுடன், அந்த பெறுமதி ரூபா.1,120,089 தொடக்கம் ரூபா.479,951,734 வரையிலான வீச்சில் காணப்பட்டது. | அரச நிறுவனங்களில் செலவுகளை மேற்கொள்ளுதல் கடும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருந்த காரணத்தாலாகும் என்பது. | தேவைப்பாட்டிற்காக போதியளவு நிதியினை ஏற்பாடு செய்து கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | நிதி சட்ட விதி 27.1 இன் பிரகாரம் ஆளுநரினால் புதிய மாகாண சபையினைக் கூட்டும் நோக்கில் அழைப்பு கிடைத்துள்ள திகதி அல்லது மாகாண சபை செயல்படுதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும் திகதி அல்லது வெளியிடப்படாது சந்தர்ப்பத்தில் கல்வி அமைச்சின் வேலைத்திட்டம் 3-1 இற்கு (அமைச்சரின் அலுவலகம்) வருடாந்த நிதிக் கூற்றின் மூலம் நிதியினை ஒதுக்குவதற்கு தேவையில்லாத போதிலும், மீளாய்வாண்டில் அமைச்சரின் அலுவலகத்திற்கு உரிய 20 செலவு விடயங்களுக்காக, ரூபா.17.651 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டு இருந்தது. அந்த 20 செலவு விடயங்களுள், 10 செலவு விடயங்களுக்குரிய நிதி 100 சதவீதம் எஞ்சியிருந்ததுடன், 10 செலவு விடயங்களுக்குரிய ரூபா 13.305 மில்லியன் நிதியினை வேறு வேலைத் திட்டத்தின் செலவு விடயங்களுக்கு நிதி சட்ட விதி 30/32 மூலம் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, தேசிய வரவு செலவு சுற்றறிக்கையின் மூலம் அரச செலவுகளை மட்டுப்படுத்தப்பட்டு இருந்த போதிலும், அவசியமற்ற மற்றும் செயல்படுத்தப்படாத வேலைத்திட்டங்களுக்காக நிதி ஒதுக்கப்பட்டு, பின்னர் அந்த நிதியினை நிதி சட்ட விதியின் மூலம் வேறு வேலைத் திட்டங்களுக்கு மாற்றிக் கொள்ளும் நோக்கத்துடன், அமைச்சரின் அலுவலகத்திற்கு நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. | தேர்தல் நடாத்தப்பட்டு அமைச்சர்கள் நியமிக்கப்பட்டவுடன் அவர்களுக்கு கடமையை ஆரம்பிப்பதற்கு நிதி இருக்க வேண்டும் என்பது மற்றும் நாட்டில் நிலவிய பணவீக்கத்தினால் செலவுகள் அதிகரித்ததால் எஞ்சிய நிதி அத்தியாவசியமான செலவுத் தலைப்புகளுக்கு மாற்றப்பட்டது என்பது. | இவ்வாறான சந்தர்ப்பத்தில் அதற்காக முறையான அனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |